Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
MONDAY, JUNE 27, 2022
திங்கட்கிழமை ஜூன் 27 2022 | ஒளி: 08 கதிர் 033 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ Free



# எந்த நாடும் தப்ப முடியாது

உணவு தட்டுப்பாட்டால் உலகம் பேரழிவை சந்திக்கும் என்றும் அதன் பின்விளைவுகளில் இருந்து எந்த நாடும் தப்ப முடியாது என்றும் ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் அன்டனியோ குட்டரஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2



## வரிசையில் நிற்போருக்கு

# இன்று முதல் டோக்கன்

பெற்றோல் மற்றும் டீசலைப் பெற வரிசையில் காத்திருக்கும் வாகன சாரதிகளுக்கு பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட டோக்கன்களை விநியோகிக்கும் வேலைத்திட்டம், இன்று (27) முதல் அமுல்படுத்தப்படும் என்று தெரிவித்த மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, அடுத்த எரிபொருள் கப்பல் எப்போது வரும் என்பதை கூறமுடியாது என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

**கப்பல் எப்போது வரும் என்பதை கூறமுடியாது**

**வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்**

## எரிபொருள் விவகாரம்

# ரஷ்யா பறக்கின்றனர் 2 அமைச்சர்கள்

எரிபொருள் இறக்குமதி மற்றும் அது தொடர்பான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இரண்டு அமைச்சர்கள் இன்றையதினம் (27) ரஷ்யாவுக்கு செல்லவுள்ளனர் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத் அமைச்சர் சுட்டிக்காட்டினார்..

தொடர்ச்சி P2

# வெளிநாட்டு நாணயங்கள் உங்களிடம் இருக்கின்றதா?

வெளிநாட்டு நாணயங்களை வைத்திருப்பதற்கான கட்டுப்பாடுகள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

## அமெரிக்க உயர்மட்டக்குழு


# இலங்கையை வந்தடைந்தது



அமெரிக்க திறைசேரி திணைக்களம் மற்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உயர்மட்டக் குழுவொன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை (26) இலங்கை வந்தடைந்தது.

எதிர்வரும் ஜூன் மாதம் 29ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருக்கவுள்ள பிரதிநிதிகள் குழுவினர், பரந்த அளவிலான அரசியல் பிரதிநிதிகள், பொருளாதார நிபுணர்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளைச் சந்திக்கவுள்ளனர்.

தொடர்ச்சி P2



# ஆஸி செல்ல முற்பட்ட 399 பேர் இதுவரை கைது

2022ஆம் ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்ற 399 பேர் இலங்கை பொலிஸார் மற்றும் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## எரிபொருள் நிரப்பு நிலையங்களில்

# 70% ஐ மூட முடிவு

நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நாடளாவிய ரீதியில் உள்ள 70% எரிபொருள் நிரப்பு நிலையங்களை தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# மட்டுப்படுத்த பணியாளர்கள் :மறு அறிவித்தல் வரை அமுல்

அரச அலுவலகங்களுக்கு அழைக்கப்படும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தும் சுற்றிக்கையை பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. மாயாதுன்னே,

தொடர்ச்சி P2

# கோடரியால் கொத்தி இளம் தாய் படுகொலை

■ ஆ.ரமேஸ்



நுவரெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சாந்திபுர ஒலிபண்ட் மேல் பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த இளம் தாய் ஒருவர், கணவரால் நடத்தப்பட்ட கோடாரி தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# ஜூலை 3 வரை 3 மணி நேர மின்வெட்டு



இலங்கை மின்சார சபையின் கோரிக்கைக்கு அமைய இன்று திங்கட்கிழமை (27) முதல் ஜூலை 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையிலான காலப்பகுதியில் 3

தொடர்ச்சி P2

# கறுப்புத் திங்களுக்கு ட்ரயல் அட் பார்

மே.9 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்ற கறுப்புத் திங்கள் சம்பவம் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளை படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக, மூன்று நீதிபதிகள் அடங்கிய ட்ரயல் அட் பார் அமர்வை நியமிக்குமாறு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## முல்லைத்தீவில் மாணவிகள் துஷ்பிரயோகம்

# 3 மாணவர்களுக்கு வலை விரிப்பு

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவில் பாடசாலை மாணவிகள் துஷ்பிரயோகத்துடன் தொடர்புடைய மேலும் மூன்று உயர்தர மாணவர்களை தேடி பொலிஸார் வலை விரித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



# வலிந்து காணாமல் போனோருக்கு நடந்தது என்ன

**குடும்பத்தினரின் முதல் கேள்வி அதுவே என்கிறார் மனோ எம்.பி**

தான் அறிந்த வகையில், வலிந்து காணாமல் போனோர் குடும்பங்களின் முதல் கேள்வி, முதல் கோரிக்கை கடத்தப்பட்டு, சரணடைந்து, கைதாகி காணாமல் போன தங்கள் உறவுகளுக்கு என்ன நிகழ்ந்தது என்பதே என தான் நினைப்பதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

# விலைகள் எகிறின

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், நேற்று ஞாயிற்றுக்கிழமை (26) அதிகாலை 2 மணி முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருட்களின் விலைகளை அதிகரித்தது.

தொடர்ச்சி P2

## ஐ.ஓ.சியும் அதிகரித்தது

எரிபொருள்களின் விலைகளை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அதிகரித்த அதேயளவான விலையில் லங்கா ஐ.ஓ.சியும் அதிகரித்துள்ளது. இந்த விலை அதிகரிப்பு நேற்று (26) காலை 8 மணிக்குப் பின்னர் அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி P2

## பார்சல் விலையும் அதிகரிப்பு



சாப்பாட்டு பார்சல் மற்றும் அனைத்து உணவு வகைகளின் விலைகளும் 10 சதவீதத்தினால் அதிகரிக்கும் என அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## பஸ் கட்டணத்தை கூட்டவும்



டீசலின் விலை 60 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதால், பஸ் கட்டணங்களை 35 சதவீதத்தால் அதிகரிக்குமாறு அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

## ஜூலை I முதல் உயர்வு



இதேவேளை, ஜூலை முதலாம் திகதி பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி திலான் மிராண்டா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஓட்டோ கட்டணமும் அதிகரிப்பு



எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டதை அடுத்து, ஓட்டோ கட்டணங்களையும் இன்று (26) முதல் அதிகரிக்கவுள்ளதாக அகில இலங்கை ஓட்டோ சாரதிகள் சங்கம் அறிவித்துள்ளது.அதன்பிரகாரம் ஓட்டோ கட்டணம் 10 ரூபாயினால் அதிகரிக்கும் என அந்த சங்கம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## ரயிலுக்கும் கூட்டவும்



ரயில் கட்டணங்களை 50 சதவீதத்தால் அதிகரிக்குமாறு அமைச்சரவைக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என ரயில்வே திணைக்கள பேச்சாளரும் பிரதிப் போக்குவரத்து அதிகாரியுமான காமினி செனவிரத்ன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## பேக்கரி தீர்மானமில்லை



எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகள் தொடர்பில் விசேட தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படாது என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கே. ஜயவர்தன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# எந்த நாடும் தப்ப முடியாது

ஜேர்மனி தலைநகர் பெர்லினில், பணக்கார மற்றும் வளரும் நாடுகளை சேர்ந்த அதிகாரிகள் பங்கேற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, “பருவநிலை மாற்றம், கொரோனா ஆகியவை முன் எப்போதும் இல்லாத அளவுக்கு பட்டினி பிரச்சினையை உருவாக்கின. அதனால் கோடிக்கணக்கானோர் பாதிக்கப்பட்டனர். உக்ரைன் போர், அந்த நிலைமையை மேலும் மோசமடைய செய்துள்ளது.

ஆசிய, ஆப்பிரிக்க, அமெரிக்க நாடுகளில் உரம், எரிபொருள் விலை உயர்வை சமாளிக்க முடியாமல் விவசாயிகள் திண்டாடுகிறார்கள். அந்த நாடுகளில் அறுவடை பாதிக்கப்படும்.
அதனால், இந்த ஆண்டு பல நாடுகளில் பஞ்சம் அறிவிக்கப்படும் அபாயம் உள்ளது.

அடுத்த ஆண்டு நிலைமை இன்னும் மோசமடையும். உணவு கிடைக்காத பிரச்சினை, உலக அளவில் உணவு தட்டுப்பாடாக மாறும். அது உலக அளவில் பேரழிவை ஏற்படுத்தும்.
எந்த நாடும் அதன் சமூக, பொருளாதார பின்விளைவுகளில் இருந்து தப்ப முடியாது.

எனவே, இதை சமாளிக்க ஐ.நா. அதிகாரிகள் ஒரு சமாதான நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறார்கள். அதன்படி, உக்ரைன் நாடு, உணவு பொருட்களை ஏற்றுமதி செய்ய முடியும். ரஷ்யா எந்த கட்டுப்பாடும் இன்றி உணவு, உரம் ஆகியவற்றை உலக சந்தைக்கு கொண்டுவர முடியும்.

ஏழை நாடுகள் மீண்டுவர கடன் நிவாரணம் அளிக்கலாம். உலக உணவு சந்தையை ஸ்திரப்படுத்த தனியார்துறை உதவ வேண்டும்“ என்று தெரிவித்தார்.

# இன்று முதல் டோக்கன்

ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் சனிக்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் எதிர்காலத்தில் வரையறுக்கப்பட்ட எரிபொருள் இருப்புக்களை விநியோகிக்கும் முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று (26) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும் டோக்கன் வழங்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முப்படையினரின் உதவி பெறப்படும் என்றும் தெரிவித்த அமைச்சர், எரிபொருள் வரிசையில் நிற்கும் நபர்களின் தொலைபேசி இலக்கங்களை பாதுகாப்புப் படையினர் பெற்றுக்கொள்வார்கள் என்றார்.

இலக்கங்களை பெற்றுக் கொண்ட பின்னர் அவர்கள் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் அந்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருள் வந்ததன் பின்னர், டோக்கன் பெற்றவர்கள் அழைக்கப்படுவார்கள் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அவர்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட்டதன் பின்னர், வரிசையில் எஞ்சியிருப்போருக்கு டோக்கன் வழங்கப்படும் என்று தெரிவித்த அவர், பெயர்களை பதிந்துகொண்டு எரிபொருள் வழங்கும் நடைமுறை தற்போதைக்கு அமுல்படுத்தப்படாது என்றார்.

தற்போதுள்ள வரிசைகளை குறைக்கும் நோக்கில் தற்போது எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் வரிசையில் நிற்பவர்களுக்கே இந்த டோக்கன்கள் வழங்கப்படுவதாகவும் எரிபொருள் வரிசையில் புதிதாக சேர்வதைத் தவிர்க்குமாறும் அமைச்சர் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார்.

மண்ணெண்ணெய்ன் விலையை அதிகரிக்கவேண்டிய தேவை உள்ளது என்றாலும், சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டுள்ளமையால், மண்ணெண்ணெய்க்கான விலையை உடனடியாக அதிகரிக்கமுடியாது என்று குறிப்பிட்டார்.

எரிபொருள் கிடைக்காத காரணத்தினால் அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் எரிபொருள் விநியோகம் செய்ய முடியாத நிலை காணப்பட்டாலும் முடியுமான வரை எரிபொருள் விநியோகிக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

## விலைகள் எகிறின

அதற்கமைய 92 ஒக்டேன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 50 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டு, புதிய விலை 470 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

95 ஒக்டேன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 100 ரூபாயினால் அதிகரித்து, 550 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

இதேவேளை ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 60 ரூபாயினால் அதிகரித்து, 460 ரூபாயாகவும்சுப்பர் டீசலின் விலை 75 ரூபாயினால் அதிகரித்து, 520 ரூபாயாகவும் திருத்தப்பட்டுள்ளது.

## பார்சல் விலையும்...

எரிபொருள் விலையேற்றம் காரணமாக அதிகரித்து வரும் செலவுகளை எதிர்கொள்ள வேண்டியதன் விளைவாகவே இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வைக் கருத்தில் கொள்ளும்போது, அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுகளை மக்களால் தாங்கிக் கொள்ள முடியாது எனவும் சுட்டிக்காட்டினார்.

அதிகரித்து வரும் செலவுகள் காரணமாக வீதியோர உணவகங்கள் முதல் ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் வரை அனைத்து வியாபாரங்களையும் மூட வேண்டியுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தை கலைத்து புதிய ஜனநாயக அரசாங்கத்தை அமைக்குமாறு அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்த அவர், இதனால் வெளிநாட்டு உதவி நாட்டுக்கு வரத் தொடங்கும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

## பஸ் கட்டணத்தை கூட்டவும் (BUS)

பஸ்கட்டணத்தை அதிகரிக்காவிட்டால் சேவையில் இருந்து விலகி தொழிற்சங்கப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் தனியார் பஸ் உரிமையாளர்களும் பாவனையாளர்களும் சமமாக அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்தார்.

எனவே, எரிபொருள் விலையேற்றத்தை கருத்தில் கொண்டு வருடாந்தம் பஸ் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், எனவே பஸ் கட்டணத்தை 35 சதவீதத்தால் அதிகரிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## ரஷ்யா பறக்கின்றனர்...

எரிபொருள் விநியோகம் தொடர்பில் எதிர்வரும் 12 மாதங்கள் இலங்கைக்கு சவாலான காலகட்டமாக இருக்கும் என தெரிவித்த அமைச்சர், எரிபொருள் வரிசைகளை முற்றாக நீக்குவது சாத்தியப்படாமலும் போகலாம் என்றும் தெரிவித்தார்.

மாதாந்த எரிபொருள் தேவை 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்பது இலங்கையால் தற்போது தாங்க முடியாதது எனவும் குறைந்தபட்சம் 350 மில்லியன் அமெரிக்க டொலர்களாக நுகர்வு குறைக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்த அவர், பொதுப் போக்குவரத்துக்கு முன்னுரிமை அளிக்கும் முறை அறிமுகப்படுத்தப்படும் என்றார்.

## வெளிநாட்டு நாணங்கள் உங்களிடம் இருக்கின்றதா?

இலங்கை பிரஜை ஒருவர் அல்லது இலங்கையில் வசிக்கும் ஒருவர் தம்வசம் வைத்திருக்கும் வெளிநாட்டு நாணயத்தின் அளவு 15,000 அமெரிக்க டொலர்களில் இருந்து 10,000 அமெரிக்க டொலர்களாக அல்லது அதற்கு சமமானதாக குறைக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்த நிபந்தனைகள் இம்மாதம் 16 ஆம் திகதி முதல் அமலுக்கு வருகிறது. எவ்வாறாயினும், அன்றைய தினம் முதல் 14 நாட்களுக்கு பொது மன்னிப்பு காலத்தை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அங்கிகரிக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கி, தேசிய சேமிப்பு வங்கிக்கு விற்பனை செய்ய முடியுமென மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## அமெரிக்க உயர்மட்டக்குழு...

அவர்களின் அனைத்து சந்திப்புகளிலும், தேவையிலுள்ள இலங்கையர்களுக்கு அமெரிக்கா ஆதரவளிப்பதற்கான மிகச் சிறந்த வழிகள், தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு உழைக்கும் இலங்கையர்கள் மற்றும் எதிர்காலத்துக்கான நிலையான மற்றும் உள்ளடக்கிய பொருளாதாரத்திற்குத் திட்டமிடும் இலங்கையர்கள் ஆகியவற்றை அவர்கள் ஆராயவுள்ளனர்.

தூதுக்குழுவின் உறுப்பினர்களில் ஆசியாவுக்கான திறைச்சேரியின் துணைச் செயலாளர் ரொபர்ட் கப்ரோத் மற்றும் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்கான துணை இராஜாங்கத் தூதர் கெல்லி கெய்டர்லிங் ஆகியோரும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

“இலங்கை மக்களின் பாதுகாப்பு மற்றும் செழிப்புக்கான எமது தொடர்ச்சியான அர்ப்பணிப்பை இந்த விஜயம் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது” என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் தெரிவித்தார்.

“இலங்கையர்கள் தங்கள் வரலாற்றில் மிகப்பெரிய பொருளாதார சவால்களை எதிர்கொண்டுள்ள நிலையில், பொருளாதார வளர்ச்சியை ஆதரிப்பதற்கும் ஜனநாயக நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கும் நாங்கள் எடுக்கும் முயற்சிகள் மிகவும் முக்கியமானதாக இருந்ததில்லை.” என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வழங்க அமெரிக்கா 6 மில்லியன் டொலர் புதிய மானியங்களை வழங்கியது.

## வலிந்து காணாமல்...

மேலும் காணாமல் போனோர் குடும்பங்களுக்கு கொடுப்பனவுகள், வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை, அரச வைத்தியசாலைகளில் முன்னுரிமை எனவும் வாக்குறுதிகளை அளித்துள்ளனர்.
மக்களிடமிருந்து என்ன ஒத்துழைப்பை இவர்கள் கோருகிறார்கள் என எனக்கு தெரியவில்லை“ என்று மனோ.எம்.பி கேள்வியெழுப்பியுள்ளார்.

“இந்த முதல் கேள்விக்கு பதில் தேடுங்கள். என்று தெரிவித்த மனோ.எம்.பி, கேட்டுக்கொண்டுள்ளார்.

## ஆஸி செல்ல...

சந்தேகநபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ தெரிவித்தார்.

சட்டவிரோதமாக நாட்டை விட்டு வெளியேற முயல்வோரிடம் இருந்து 200,000 ரூபாய் முதல் 1,000,000 ரூபாய் பணத்தை ஆட்கடத்தல்காரர்கள் பெற்றுக்கெள்வதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக சுட்டிக்காட்டினார்.

ஆட் கடத்தல்காரர்கள் பழுதடைந்த படகுகளையும் உடைந்த படகுகளையும் சட்டவிரோத நடவடிக்கைகளில் பயன்படுத்துவதாகவும் இதன் மூலம் உயிராபத்துக்கள் அதிகம் ஏற்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடத்தல்காரர்களுக்கு 1 முதல் 5 வருட வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்றும் பொலிஸ் பேச்சாளர் எச்சரித்துள்ளார்.

## மறு அறிவித்தல்...

நேற்று (26) வெளியிட்டார்.
நிறுவனங்களுக்குத் தேவையான அத்தியாவசியமான ஆகக் குறைந்தபட்ச ஊழியர்களுடன் செயல்பாடுகளைத் தொடருமாறு சுற்றறிக்கை மூலம் அமைச்சுகளின் செயலாளர்கள், மகாண பிரதம செயலாளர்கள் மற்றும் நிறுவன தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், உத்தியோகத்தர்களை முடிந்தவரை வீட்டிலேயே இருக்க அனுமதிக்குமாறும், அவர்களின் சேவைகளை இணையம் மூலம் பெறுவதற்கு முன்னுரிமை வழங்குமாறும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, நாளாந்த போக்குவரத்து வசதிகளை பெறுவதில் பொதுமக்கள் எதிர்நோக்கும் சிரமங்களை கருத்திற்கொண்டும் அத்தியாவசிய சேவைகளுக்கான கோரிக்கையை கருத்தில் கொண்டும் இந்த சுற்றறிக்கை மறு அறிவித்தல் வரை அமுலில் இருக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுமக்களுடன் நேரடியாகப் பழகும் ஊழியர்களை அழைப்பது தொடர்பான தீர்மானங்கள், சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்கள் மற்றும் மாகாண பிரதம செயலாளர்களின் ஆலோசனை மற்றும் மேற்பார்வையுடன் எடுக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு நிறுவனத் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எரிபொருள் பயன்பாட்டைக் குறைக்கும் வகையில் அரச பணியாளர்களின் போக்குவரத்து கட்டுப்படுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கறுப்புத் திங்களுக்கு ட்ரயல் அட் பார்

சட்டமா அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.
பாராளுமன்ற உறுப்பினர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாகவே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட அமரகீர்த்தி அத்துகோரளை மீதான அனுதாப பிரேரணை, பாராளுமன்றத்தில் அண்மையில் இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றிய உறுப்பினர்களில் பெரும்பாலானோர். இந்த படுகொலை தொடர்பில் ட்ரயல் அட்பார் நியமித்து விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கோடரியால் கொத்தி...

சனிக்கிழமை இரவு 10.30 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் நுவரெலியா பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்தில் ஒன்றரை வயது மற்றும் மூன்றரை வயதுடைய இரண்டு பெண் பிள்ளைகளின் தாயான சுப்பிரமணியம் சத்தியவாணி வயது (24) என்பவரே பரிதாபமாக கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இளம் பெண்ணின் கணவர் தோட்டத்தில் தொழில் செய்து வருவதுடன், பகுதி நேர வருமானத்துக்காக நுவரெலியா நகரில் ஓட்டோ சாரதியாகவும் பணியாற்றி வருகின்றார்.

## ஜூலை 1 முதல் உயர்வு

ஜூலை 1ஆம் திகதி முதல் வருடாந்தம் கட்டாயமாக விதிக்கப்படும் பஸ் கட்டணத் திருத்தம் அமலுக்கு வரவுள்ள நிலையில், எரிபொருள் மற்றும் உதிரி பாகங்களின் விலை உயர்வு, டொலரின் மதிப்பு உயர்வு என பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார்.

அமைச்சருக்கும் பஸ் சங்க அதிகாரிகளுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று நாளை (28) இடம்பெறவுள்ளதாகவும் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

## ரயிலுக்கும் கூட்டவும்

நாளாந்தம் ரயில்களில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறது எனவும் வரையறுக்கப்பட்ட கட்டணத்தின் அடிப்படையில் ரயில்வே திணைக்களத்துக்கான எரிபொருள் செலவை சமாளிக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாளொன்றுக்கு ஒரு ரயிலுக்காக ஒரு லட்சம் லீற்றருக்கு அதிகமாக எரிபொருள் தேவைப்படுகின்றது.
அதில் ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்வதற்காக, கட்டாயமாக ரயில் கட்டணங்கள் அதிகரிக்கப்படவேண்டும் என்று தெரிவித்துள்ள அவர், அதனைத் தவிர மாற்று வழிகளே இல்லை என்றார்.

ரயில் கட்டண அதிகரிப்புக்கு அமைச்சரவை அனுமதி மட்டுமே போதாது என்று தெரிவித்துள்ள காமினி செனவிரத்ன, பாராளுமன்றத்தின் அனுமதியும் தேவையாகும் என்றார்.

எவ்வாறாயினும், ரயில் திணைக்களத்திடம் போதுமான அளவுக்கு எரிபொருள் கையிருப்பில் உள்ளது என்றார்.

## ஜூலை 3 வரை 3 மணி நேர...

இலங்கை மின்சார சபையின் கோரிக்கைக்கு அமைய இன்று திங்கட்கிழமை (27) முதல் ஜூலை 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையிலான காலப்பகுதியில் 3

மணிநேர மின்வெட்டை அமுல்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதற்கமைய, ஏ முதல் டபிள்யூ ஆகிய 20 வலயங்களில் பகல் வேளையில் 1 மணி நேரம் 40 நிமிடங்களும், இரவு வேளையில் 1 மணி நேரம் 20 நிமிடங்களும் மின் வெட்டு அமல்படுத்தப்படவுள்ளது.

ஜூலை 2 மற்றும் 3ஆம் திகதிகள் தவிர்ந்த ஏனைய தினங்களில் சீசீ வலயங்களில் காலை 6 மணிமுதல் 8 மணிவரை 2 மணிநேர மின்வெட்டும், எம்,என்,ஓ,எக்ஸ்,வை, ஸெட் ஆகிய வலயங்களில் காலை 5 மணிமுதல் 8 மணிவரை 3 மணிநேர மின்வெட்டும் அமுலாகும் என ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## 70% ஐ மூட...

30 நாட்களுக்கு முன்னரே முற்பதிவு செய்த போதிலும், போதியளவு எரிபொருள் இன்னும் கிடைக்கவில்லை என்றும் வரிசையில் காத்திருக்க வேண்டாம் எனவும் சங்கம், மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

சிறுதொகை எரிபொருளே விநியோகிக்கப்பட்டுள்ளதால், 20 சதவீதமானோருக்காவது எரிபொருளை விநியோகிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, சில எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மாத்திரமே பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் பாதுகாப்புக்கு பொலிஸ் பாதுகாப்பு போதுமானதாக இல்லாததால், இராணுவ பாதுகாப்பை வழங்குமாறும் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் மோதல்கள் இடம்பெறுவதால், 24 மணித்தியாலங்களும் பாதுகாப்பு போடப்படுவது அவசியம் எனவும் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

## 3 மாணவர்களுக்கு வலை விரிப்பு

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், முல்லைத்தீவில் உயர்தரத்தில் கல்விகற்று வரும் பாடசாலை மாணவி துஷ்பிரயோகம் மற்றும் மாணவிகளின் நிர்வாண காணொளிகள் வைத்துள்ள குற்றச்சாட்டில் பிரத்தியேக வகுப்பு ஆசிரியர் உள்ளிட்ட 5 மாணவர்கள் முல்லைத்தீவு பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## பேக்கரி தீர்மானமில்லை...

மேலும் பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகள் மேலும் அதிகரிக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேக்கரி பொருட்களின் விலையை சம்பந்தப்பட்ட பேக்கரி உற்பத்தியாளரே ஏற்பார்கள் என்று தெரிவித்த அவர், மேலும் விலையை அதிகரிக்க பேக்கரி உரிமையாளர்களுக்கு வாய்ப்பு இல்லை எனவும் தெரிவித்தார்.

# 25 கேன்களில் டீசல் சிக்கியது

■ வி.சுகிர்தகுமார்

அக்கரைப்பற்று பட்டியடிப்பிட்டி இராணுவச் சாவடி அருகில் 25 சிறிய கேன்களில் உழவு இயந்திரமொன்றில் கொண்டு செல்லப்பட்ட டீசல் பொதுமக்களால் சுற்றிவளைக்கப்பட்டு கைப்பற்றப்பட்டது.

அக்கரைப்பற்றில் தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் அத்தியாவசிய சேவைக்காக கொண்டு செல்லப்பட்டதாக கருதப்படும் கேன்கள் இவ்வாறு பொதுமக்களால் மடக்கி பிடிக்கப்பட்டு அக்கரைப்பற்று பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

குறித்த எரிபொருள் நிலையம் ஒன்றினூடாக பல சந்தர்ப்பங்களில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதாக தகவல்கள் வெளியாகியாகின்றன.

இந்நிலையில் நேற்று (26) நண்பகல் 25 சிறிய கேன்களில் டீசல் நிரப்பப்பட்ட உழவு இயந்திரும் அக்கரைப்பற்று பிரதேசம் நோக்கி புறப்படுவதாக பொதுமக்கள் அறிந்து கொண்டனர். அதன்பின்னர் பட்டியடிப்பிட்டி இராணுவ சாவடி அருகே ஒன்று கூடிய மக்கள், உழவு இயந்திரத்தை தடுத்து நிறுத்தி பொலிஸாருக்கு தகவலை வழங்கினர்.

இந்நிலையில் அங்கு வருகைதந்த அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார், உழவு இயந்திரத்தை கைப்பற்றி அதில் உள்ள கலன்களில் டீசல் இருப்பதை உறுதிப்படுத்திய பின்னர் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்துக்கு உழவு இயந்திரத்தை ஓட்டிச்சென்றனர்.

ஆயினும், பொலிஸ் நிலையம் வருகை தந்த சில விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் அவை தங்களது அமைப்புகளுக்கு வழங்கப்பட்டதாக தெரிவித்ததுடன் அதற்கான ஆவணங்களையும் பொலிஸார்டம் கையளித்தனர்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

விவசாய அமைப்புக்களுக்கு இவ்வாறு மொத்தமாக டீசலை கொண்டு செல்வதற்கு அனுமதி உண்டா? அவ்வாறெனில் அனுமதியை வழங்கியது யார்? வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனங்கள் காத்திருக்க இது போன்ற செயற்பாடுகள் முறையானதா? போன்ற கேள்விகள் மக்கள் மத்தியில் உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## மலையகத்துக்கு சேவையில் ஈடுபடும் ரயில்கள் இரண்டு ஜூலை முதல் ஓடாது

■ ரஞ்சித் ராஜபக்ஷ

மலையகத்துக்கான இரண்டு ரயில் சேவைகளை இடைநிறுத்த ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, நானுஓயா ரயில் நிலையத்திலிருந்து கொழும்பு கோட்டை வரையும் கொழும்பு கோட்டையிலிருந்து நானுஓயா வரையும் தினமும் சேவையில் ஈடுபட்டு வந்த 1023 மற்றும் 1024 ஆகிய இலக்கங்களையுடைய இரு ரயில் சேவைகளும் அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து சேவையிலிருந்து நிறுத்தப்படுவதாக ரயில் கட்டுபாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

நானுஓயா ரயில் நிலையத்திலிருந்து காலை 6மணிக்கு ஆரம்பித்து, பிற்பகல் 1.30 மணிக்கு கொழும்பு கோட்டையை வந்தடையும் ரயிலும் பகல் 12.40 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் பயணத்தை ஆரம்பித்து, இரவு 9.30 மணிக்கு நானுஓயா ரயில் நிலையத்தை சென்றடையும் ரயில்களே இவ்வாறு நிறுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ரயில்களில் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நுவரெலியாவுக்குச் செல்வதுடன், இவர்களுக்கு மேலதிகமாக பாடாலை மாணவர்கள், அரசாங்க அதிகாரிகள் உள்ளிட்டவர்களும் இந்த ரயில் சேவைகளால் பயனடைந்து வந்தனர்.

எனினும் இந்த ரயில்கள் இரண்டையும் நிறுத்தி, குறித்த நேரத்தில் இரண்டு பெட்டிகளுடன் பொருள் விநியோக சேவையை அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

## அமைச்சுப் பதவிகளை கோரும் முன்னாள் அமைச்சர்கள்

அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் சிலர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்து தங்களுக்கு பதவிகள் வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளதாக தெரியவருகிறது.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது முன்னாள் அமைச்சர்கள் இராஜாங்க அமைச்சர்கள் தங்களுக்கு இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரியவருகிறது.

தங்களுக்கு தங்களது சொந்த ஊர்களுக்குr; செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதன்போது முன்னாள் அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் முறையிட்டுள்ளனர்.

இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி> தற்போதைய அமைச்சரவை அமைச்சர்களுடன் இணைந்து செயல்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்படும் திகதிகள் தொடர்பில் ஜனாதிபதி இதன்போது எதனையும் கூறவில்லை

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பதவியோ அல்லது இராஜாங்க அமைச்சுப் பதவியோ தங்களுக்கு வழங்கப்படவில்லை என்பது தொடர்பில் முன்னாள் அமைச்சர்கள் பலர் அதிருப்தியில் இருப்பதாகவும் அறியமுடிகின்றது.

## நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்தவும்



கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் நிர்மாணப் பணிகள் தாமதிக்கப்படமாட்டாது என துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை தனியாரிடம் ஒப்படைக்கவே மாட்டோம் என்றும் அவர் கூறினார்.

கொழும்பு துறைமுகத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் ECT முனையத்தின் நிர்மாணப் பணிகளை கடந்த 25ஆம் திகதி பார்வையிட்ட பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையமும், அதன் செயற்பாடுகளும் துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான முனையமாக முழுமையாக செயற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குறுகிய அரசியல் இலாபங்களுக்காக சில தொழிற்சங்கங்களும், தனிநபர்களும் இந்த முனையம் தொடர்பில் வெளியிடப்படும் பொறுப்பற்ற அறிக்கைகளை நிராகரிப்பதாகவும் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

## மொட்டிலிருந்து உதிர்ந்த கட்சிகள் கூட்டணியாக மலர்கிறது

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீனமாக இயங்கும் கட்சித்தலைவர்கள் புதிய அரசியல் கூட்டணி ஒன்றை அடுத்த மாதத்தில் ஆரம்பிக்க உள்ளனர். முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ச உதய கம்மன்பில வாசுதேவ நாணயக்கார உள்ளிட்ட 9 கட்சிகளின் தலைவர்கள் இணைந்து இந்த அரசியல் கூட்டணியை ஆரம்பிக்க உள்ளனர்

புதிய இந்த அரசியல் கூட்டணிக்காக பல பெயர்களும் சின்னங்களும் முன்மொழியப்பட்டுள்ள போதிலும் இது தொடர்பில் இறுதியான தீர்மானம் எதுவும் இதுவரையில் எட்டப்படவில்லை எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் புதிய அரசியல் கூட்டணியின் தலைவர் தொடர்பில் எந்தவிதமான தீர்மானங்களும் இதுவரையில் எடுக்கப்படவில்லை.

எவ்வாறாயினும், இந்த அரசியல் கூட்டணிக்கான செயற்குழு அமைப்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மலர்ச்சாலை உரிமையாளர் சுட்டுப்படுகொலை

மித்தெனியவில் மலர்சாலை உரிமையாளரான ஏ.கே.பி மஞ்சுளாசிறி (வயது 52) இனந்தெரியாத நபர்களினால் நேற்று (26) காலை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என மின்தெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

இறுதிச்சடங்கு ஏற்பாடுகளை ஒப்படைப்பதற்காக அழைத்து வரப்பட்டு, அவரது மலர்ச்சாலைக்கு முன்பாக துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த வர்த்தகர் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## வீட்டின் அறையில் தீ: தாயும் தந்தையும் பலியாகினர்: பிள்ளைகள் இருவருக்கு காயம்

வீடொன்றின் அறைக்குள் ஏற்பட்ட தீயினால் தாயும் தந்தையும் மரணமடைந்து, அவ்விருவரின் இரண்டு பெண் பிள்ளைகளும் கடும் காயங்களுக்கு உள்ளான நிலையில் மரணமடைந்துள்ளனர்.

இந்த சம்பவம் கஹதுடுவ, மாகம்மன பிரதேசத்தில் நேற்று முன்தினம் (25) இரவு இடம்பெற்றுள்ளது.

தீ காயங்களுக்கு உள்ளான நால்வரும் ஹோமாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். 41 வயதான தந்தையும் 38 வயதான தாயும், மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர் அங்கு அவ்விருவரும் மரணமடைந்துள்ளனர்.

தீ விபத்தில் காயமடைந்த 18 வயது சிறுமி கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்ற நிலையில் 4 வயது சிறுமி மேலதிக சிகிச்சைக்காக லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## கிண்ணியா வலய ஆசிரியர்களுக்கு இன்று முதல் இலவச பஸ்

■ ஒலுமுதீன் கியாஸ்

தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடியை கருத்திற்கொண்டு, கிண்ணியா வலய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி, இலவச போக்குவரத்துக்காக, இரு பஸ்கள் நாளை(27)முதல் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

அல் ஹிக்மத் உம்மா பவுண்டேஷன் அனுசரனையுடன் கிண்ணியா வலயக்கல்வி அலுவலகத்தினால் இந்த சேவை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, உத்தியோகபூர்வை சேவையை இன்று (27) காலை 6.45 இற்கு இரு பஸ்களும் கிண்ணியா வலயக்கல்வி அலுவலகத்தில் இருந்து உத்தியோகபூர்வமாக சேவையை ஆரம்பிக்க உள்ளது.

முதலாவது பஸ் சேவை கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்தில் இருந்து நடுவூற்று, ஊடாக வான்எல செல்வதற்கும், இரண்டாவது பஸ் சேவை கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்தில் இருந்து முள்ளிப்பொத்தானை வரை செல்வதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## பெற்றோர்களை பிள்ளைகள் பற்றி சிந்தியுங்கள்; வைத்தியர்

உணவுத் தட்டுப்பாடு காரணமாக மந்த போசனைக்கு உள்ளாகும் சிறுவர்களின் எண்ணிக்கை 20 சதவீதமாக அதிகரித்துள்ளதாக விசேட வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் சிறுவர்களில் 15 தொடக்கம் 20 வரையான சிறுவர்கள் மந்த போசனை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார்.

இதுதொடர்பில் விசேட பரிசோதனைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்ப ட்டுள்ளதாகவும் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

பிள்ளைகளின் போஷாக்கு மட்டம் பாதியளவில் குறைந்து வருவதாக தெரிவிக்கும் தீபால் பெரேரா, போதைப்பொருள் புகைப்பொருள் உள்ளிட்டவற்றுக்கு செலவிடும் பணத்தை பிள்ளைகளுக்கு முட்டை உள்ளிட்ட போஷாக்கான உணவுகளை பெற்றுக்கொடுக்க செலவு செய்யுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார். தற்போதைய நிலையில் புகைப்பொருள் ஒன்றை கொள்வனவுச் செய்யும் பணத்தில் இரண்டு முட்டைகளை கொள்வனவுச் செய்யலாம் என்றும் கூறியுள்ளார். உணவுத் தட்டுப்பாட்டுக்கு மத்தியில் சிறுவர்களின் மந்த போசணை தொடர்பில் பெற்றோர்கள் அதிகூடிய கவனம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ளார்.



## 12 வருட குடும்ப ஆட்சி

# போர்க்கொடி

■ பைஷல் இஸ்மாயில்

அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஆட்சி அதிகாரங்கள் ஒரு குறிப்பட்ட குடும்பத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்துகொண்டு கடந்த 12 வருடகாலமாக அதன் செயற்பாடுகள் யாவும் மழுங்கடிக்கப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ள அட்டாளைச் சேனை மாற்றத்துக்கான முன்னணியின் செயலாளர் அஸ்வர் சாலி அங்கு பாரியளவு ஊழல் மோசடிகளை செய்துவந்தவர்களின் கபடத்தனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றார்.

அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் மீனோடைக்கட்டு மாற்றத்துக்கான முன்னணியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் (25) மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.




அங்கு அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், தீகவாபி, திராய்க்கேணி போன்ற பிரதேங்களுக்கு கடந்த 12 வருடங்களாக செய்த சேவைகள் என்னவென்று பார்த்தால் அது பூச்சியமாகத்தான் இருக்கின்றது. 55 நபர்களைக் கொண்டு இயங்கிய அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் இன்று 4 நபர்களைக்கொண்டு இயங்கி வருகின்றது. இதுதொடர்பில் எமது பிரதேச மக்கள் மிக ஆழமாக சிந்திக்கவேண்டும்.

55 பேரைக்கொண்டு இயங்கிய சங்கம் இன்று 4 பேராக இயங்கிவரக் காரணம் என்ன? இதுபற்றி அன்று சிந்தித்தார்களா? அவ்வாறு சிந்தித்திருந்தால் அன்றே ஒரு மாற்றத்தை கொண்டுவந்திருக்க முடியும். இன்று பெரியதொரு போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது என்றார்.

அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், குடும்பத்தின் ஆட்சியாக நிலைநிறுத்தப்பட வேண்டும் என்ற சிந்தனையிலேயே அவர்களின் செயற்பாடுகள் இன்றுவரை இருக்கின்றது. மக்கள் நலன் சார்ந்த விடயங்களைப் பற்றியோ, சங்கத்திற்கு இலாபம் ஈட்டுகின்ற செயற்பாடுகளைப் பற்றியோ ஒருநாளும் சிந்தித்ததும் இல்லை, சிந்திக்கப்போவதும் இல்லை. அவ்வாறு சிந்தித்திருந்தால் ஏனைய பிரதேசங்களில் இருக்கின்ற பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களைப்போன்று இன்று முன்னிலை சங்கமாக இருந்திருக்கும் என்றார்.

# இந்திய மண்ணெண்ணெய் இலங்கைக்கு வருகிறது

■ எஸ். தில்லைநாதன்

இந்தியாவிலிருந்து 3 இலட்சம் கொள்கலன்களில் மண்ணெண்ணெயை இலங்கைக்கு எடுத்து வருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இந்தியாவில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வந்த நிலையில், ஒவ்வொன்றும் 210 லீட்டர் கொள்ளக்கூடிய 3 இலட்சம் கொள்கலன்கள்களில் மண்ணெண்ணெய் இறக்குமதிச் செய்வதற்கு சாதகமான முடிவு எட்டப்பட்டுள்ளது.



கப்பலில் எடுத்து வருவதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் கப்பல் துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவிடம் கலந்துரையாடப்பட்டதுடன் பாதுகாப்புச் செயலாளரிடமும் தொலைபேசியில் கலந்துரையாடி உள்ளேன் என்று அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார்.

ஆகவே, தற்போதைய நெருக்கடி நிலைமைகளில் விவசாயிகள் மற்றும் கடற்தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க இந்தியாவில் இருந்து விரைவாக மண்ணெண்ணெய் இறக்குமதி செய்யப்படுமெடும் என்றார்.

# 4 கி.மீ வரிசையில் நின்றிருந்த பணிப்பாளர்

■ நிதர்சன் வினோத்

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் Dr. A. கேதீஸ்வரன் எரிபொருள் வரிசையில் காத்திருந்து தனது மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோல் பெற்றுக் கொண்டுள்ளார்.

சுகாதார சேவைகள் திணைக்களத்தினருக்கான பெற்றோல் விநியோகம் வடமராட்சி, புலோலி பல நோக்கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் விநியோகிக்கப்பட்டது.

அங்கு 4 கிலோ மீற்றர் வரை மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் வரிசையில் காத்திருந்தன. அந்த வரிசையில் பணிப்பாளரும் காத்திருந்தார். அத்துடன், நூற்றுக்கணக்கான தாதியர்கள், வைத்தியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் வரிசையில் கைத்திருந்து எரிபொருளை பெற்றுக் கொண்டனர்.



## யாழ்.மாவட்ட மக்களுக்கு
# ஓர் அறிவிப்பு



யாழ். மாவட்டத்தில் இன்றிலிருந்து (27) பங்கீட்டு அடிப்படையில் எரிபொருளை நியோகிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான பங்கீட்டு அட்டை பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றது.

அரச திணைக்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான எரிபொருள் பங்கீட்டு அட்டை அந்தந்த திணைக்களத் தலைவர்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றது.

இதுவரை இந்த எரிபொருளுக்கான பங்கீட்டு விநியோக அட்டையையும் பெற்றுக்கொள்ளாத அரச திணைக்களங்கள், யாழ்ப்பாண மாவட்டச்செயலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் அறிவுறுத்தியுள்ளார்.

# பாராட்டு விழா






■ சகா

கிழக்கில் பிரசித்தி பெற்ற கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில் கடந்த 2020 ஆம் ஆண்டு இடம் பெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனை படைத்து, சித்திபெற்ற 275 மாணவர்களுக்கான பாராட்டு விழா அதிபர் அருட்சகோதரர் செபமாலை சந்தியாகோ அடிகளார் தலைமையில் நேற்று முன்தினம் (25) நடைபெற்றது. அதில், பிரதம அதிதியாக கிழக்குமாகாண பொது சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி மூத்ததம்பி கோபாலரத்தினம் கலந்து சிறப்பித்தார். கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில் 2020ஆம் ஆண்டில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய 280 மாணவர்களில் 275 மாணவர்கள் சித்தி பெற்றிருந்தார்கள்.

## 15 இலட்சம் ரூபாய் இலஞ்ச விவகாரம்:
# முறைப்பாடு செய்தவருக்கு அச்சுறுத்தலென முறைப்பாடு

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பில் காணி விவகாரம் ஒன்றுக்கு 15 இலட்சம் ரூபாய் இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் முறைப்பாடு செய்தவருக்கு எதிராக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக, காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த இலஞ்சம் வாங்கிய விவகாரம் தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் சகோதார் உட்பட அபிவிருத்தி உத்தியோகத்தர் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் உறவினர்களே அச்சுறுத்தல் விடுத்துள்ளனர் என கடந்த வெள்ளிக்கிழமை செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணி ஒன்றின் அனுமதியை பெறுவதற்கு அதன் உரிமையாளரிடம் இருந்து 15 இலட்சம் ரூபாய் இலஞ்சமாக கோரியோருக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு அதிகாரிகளுக்கு, காத்தான்குடியைச் சேர்ந்த முஹம்மத் தம்பி உவைஸ் என்பவர் கடந்த புதன்கிழமை (22) திகதி முறைப்பாடு செய்திருந்தார். அதன்பின்னரே அந்த மூவரும் கைதுசெய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# எரிவாய்வுக்கு குடும்ப அட்டை

■ எச்.எம்.எம்.பர்ஸான்




பொதுமக்கள் சமயல் எரிவாயு மற்றும் எரிபொருட்களை பெற்றுக்கொள்ள தொடர்ந்தும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அந்தவகையில், கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மக்களும் நாளுக்கு நாள் வீதியோரங்களில் எரிவாயுக்காக காத்துக் கிடந்து ஏமாற்றத்துடன் வீடுகளுக்குச் செல்கின்றனர்.

இவ்வாறான நிலைமையினைக் கருத்திற்கொண்டு பொதுமக்களின் நலன் கருதி ஓட்டமாவடி பிரதேச செயலகம் எரிவாயு சிலிண்டர்களை பெற்றுக்கொள்ள குடும்ப விநியோக அட்டை ஒன்றினை அறிமுகம் செய்துள்ளது.

கிராம உத்தியோகத்தர் ஊடாக வாக்காளர் இடாப்பின் படி, குடும்பத் தலைவர் ஒருவருக்கு வழங்கப்படுகிறது.

# இளைஞன் உயிரிழப்பு; மூவருக்கு விளக்கமறியல்

■ எம்.றொசாந்த், செந்தூரன் பிரதீபன்.



யாழ்ப்பாணம், மகாத்மா காந்தி (மணிக்கூட்டு) வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைத்து தாக்கப்பட்ட இளைஞன் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மூவரையும் ஜூலை 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் மற்றும் தலைக்கவசத்தினால் தாக்குதல் நடத்திய இருவருமே மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த 19ஆம் திகதி இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றினை அடுத்து யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த உடுவில் செபமாலை கோவிலடியைச் சேர்ந்த செல்வரத்தினம் பிரசாந் (வயது-24) என்பவர் கடந்த 22ஆம் திகதி உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் தாக்குதல் நடத்திய இருவர் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வெள்ளிக்கிழமை இரவு முற்படுத்தப்பட்டனர்.

அவர்கள் மீது கொலை உள்ளிட்ட 4 குற்றச்சாட்டுகளை முன்வைத்து பொலிஸார் பி அறிக்கையை தாக்கல் செய்திருந்தனர்.

இந்த நிலையில் சட்டத்தரணி ஊடாக பொலிஸ் நிலையத்தில் சரண்டைந்த எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர். யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் சனிக்கிழமை பிற்பகல் முற்படுத்தப்பட்டனர்.

முகாமையாளர் சார்பில் முன்வைக்கப்பட்ட பிணை விண்ணப்பத்தை நிராகரித்த நீதிவான், அவரையும் வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

# 630 லீற்றர் டீசலுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம் - மானிப்பாய் பகுதியில் உரிமம் இன்றி 630 லீற்றர் எரிபொருளை பதுக்கி வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரின் வீட்டில் சட்டவிரோதமான முறையில் எரிபொருள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையின் யாழ்.முகாமிற்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, 24ஆம் திகதி இரவு சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில், 27 வயதுடைய இளைஞர் கைது செய்யப்பட்டதுடன், மேலதிக விசாரணைகளுக்காக மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.






# 15 நாட்களாகியும் பெற்றோல் இல்லை

■ எச்.எம்.எம்.பர்ஸான்

15 நாட்களாக பெற்றோல் வழங்கப்படாமை காரணமாக கவலை அடைந்துள்ள ஆலையடிவேம்பு பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டம் செய்வோம் எனவும் எச்சரிக்கை விடுத்தனர்.

வெயில் மழைக்கு மத்தியில் ஆலையடிவேம்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்க எரிபொருள் விற்பனை நிலையத்தில் பெற்றோலை பெறும் பொருட்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஓட்டோ வாகனங்களை வீதியோரங்களில் நிறுத்தி வைத்திருந்து இரவு பகல் பாராது கண்விழித்திருக்கும் பொதுமக்களே இவ்வாறு கருத்து தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேசங்களில் 9 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் உள்ளதாகவும், இதில் ஆலையடிவேம்பு பிரதேசத்தில் மூன்று எரிபொருள் நிரப்பு நிலையங்களும் உள்ள நிலையில் இரு நிலையங்களையே அதிகம் தாம் பயன்படுத்துவதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

# எரிபொருள்களுக்கு புதிய நடைமுறை

■ அஸ்லம் எஸ்.மௌலானா

கல்முனை மாநகர பிரதேசங்களில் எரிபொருள் விநியோகத்தை குளறுபடிகளின்றி சீராக முன்னெடுக்கும் பொருட்டு மண்ணெண்ணெய்க்கு குடும்ப அட்டையும் பெற்றோல், டீசல் விநியோகத்திற்காக வாகனங்களுக்கு விசேட அனுமதிப்பத்திரமும் (பாஸ்) வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.


கல்முனை மாநகர சபையில் சனிக்கிழமை (25) பிற்பகல் நடைபெற்ற உயர்மட்டக் கலந்துரையாடலிலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில், கல்முனை மாநகராட்சி எல்லையினுள் இயங்கி வருகின்ற 10 எரிபொருள் நிரப்பு நிலையங்களினதும் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

இக்கலந்துரையாடலில் பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விநியோகத்தின்போது ஏற்படுகின்ற குளறுபடிகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அவற்றை நிவர்த்தி செய்து, விநியோக நடவடிக்கைகளை சீராக முன்னெடுப்பதற்குரிய பொறிமுறைகள் தொடர்பாக நீண்ட ஆராயப்பட்டது.



எரிபொருள்கள் விநியோகத்தின்போது உரிய மக்களுக்கு அவை கிடைப்பதை உறுதி செய்தல்இ பதுக்கல் மற்றும் முறைகேடான செயற்பாடுகளை முறியடித்தல், குழப்பங்கள் ஏற்படுவதை தவிர்த்தல் போன்றவற்றை மையமாகக் கொண்டு ஆலோசனைகள் பரிசீலிக்கப்பட்டன.



## தனிமையில் வாழ்ந்த மூதாட்டி
# வன்புணர்ந்து படுகொலை

■ என். ராஜ்

காங்கேசன்துறை - கொல்லங்கலட்டியில் வீட்டில் தனிமையில் வாழ்ந்த காலைசாணை தவமணி (வயது-78) என்ற மூதாட்டி வன்புணர்வுக்கு உற்படுத்திய பின், கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். வெள்ளிக்கிழமை காலை குறித்த மூதாட்டி கழுத்தில் வெட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டதை அடுத்து,சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி முன்னிலையில் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதில், மூதாட்டி கொடுமையாக வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பின் கொலை செய்யப்பட்டுள்ளார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாரும் பாடசாலைக்குச் செல்ல மாட்டார்கள்

■ என். ராஜ், எஸ். தில்லைநாதன்



ஆசிரியர்கள், அதிபர்கள் திங்கள் (27) முதல் பாடசாலைக்குச் செல்ல மாட்டார்கள் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

பாடசாலைகள் ஆரம்பமாகும் போது எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இது அனைவரையும் குழப்புகின்ற அறிவிப்பாகவே இருக்கின்றது.

அதாவது நகர்ப்புற பாடசாலைகள் மூன்று நாட்களும் கிராமப்புற பாடசாலைகள் ஐந்து நாட்களும் நடைபெற வேண்டும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது

கிராமப் புறங்களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒட்டுமொத்தமாக நகரங்களிலிருந்து செல்கின்றவர்கள். அவர்களுக்கு செல்வதற்கான போக்குவரத்து மார்க்கங்கள் எதுவுமே இல்லை. பொதுப் போக்குவரத்து பேருந்துகள் கூட அந்த ஆசிரியர்களை ஏற்றிச்செல்ல மறுக்கின்றன அவர்கள் தனியாகச் செல்வதற்கு எரிபொருள் இல்லை.

இந்த நிலையில் அவர்களை பாடசாலைக்குச் சென்று மாணவர்களுக்கு கற்பியுங்கள் எனக் கூறுவது உண்மையில் மோசமான ஓர் அறிவிப்பாகும்.

எரிபொருளுக்காக தீர்வு கிடைக்கும் வரை நாங்கள் யாருமே பாடசாலைக்குச் செல்ல மாட்டோம் இது உறுதியானது என்றும் சங்கம் அறிவித்துள்ளது.

பதுளை இ.போ.ச டிப்போவிலிருந்து

# 50 % பஸ்கள் ஓடுவதில்லை

■ பாலித ஆரியவன்ஸ

பதுளையில் உள்ள இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் டிப்போவில் 50 சதவீதமான பஸ்கள் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளன. டயர், பெட்டரிகள் இன்மை காரணமாகவே இவை நிறுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு இடைநிறுத்தப்பட்ட பஸ்கள் பதுளை டிப்போ வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த 50 சதவீதமான பஸ்களுள் பெரும்பாலானவை பதுளையிலிருந்து கொழும்பு, நீர்கொழும்பு,கற்பிட்டி, அளுத்கம, காலி, யாழ்ப்பாணம், கண்டி, அம்பாறை, மட்டகளப்பு ஆகிய தூர இடங்களுக்கு சேவையில் ஈடுபடுத்தப்படவேண்டிய பஸ்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த பதுளை டிப்போவின் உதவி முகாமையாளர் சீ.பீ. ராஜபக்ஷ, ஏனைய டிப்போக்கள் போலவே பதுளை டிப்போவின் நிலையும் மிகவும் மோசமாக உள்ளது.

அன்றாடம் இந்த பஸ் டிப்போவிலிருந்து 117 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்ற நிலையில், இன்று 50 சதவீதமான பஸ்களே சேவையில் ஈடுபடுவதாகவும் நாளுக்கு நாள் இவற்றின் எண்ணிக்கை குறைந்து வருவதாகவும் தெரிவித்தார்.

இதற்கான பிரதான காரணம் டயர் மற்றும் பெட்டரி இன்மையே என தெரிவித்த அவர், முன்பு அம்பாறை டயர் தொழிற்சாலையிலிருந்து இ.போ.சவுக்கு தேவையான டயர்கள் பெற்றுக்கொள்ளப்பட்டாலும் தற்போது அங்கிருந்து பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதேப்போல் இந்த பஸ்களின் திருத்த பணிகளுக்காக பிரதேச மட்டங்களில் காணப்பட்ட மத்திய நிலையங்களும் பல வருடங்களாக மூடப்பட்டுள்ளன.

எனவே இவ்வாறு பஸ்கள் சேவையில் ஈடுபடாமையால் மாதாந்த பருவக்கால சீட்டுகளைப் பெற்றுள்ள மாணவர்கள் உள்ளிட்டவர்களுக்கு பிரச்சினையாகியுள்ளது.

எனவே பஸ்களை விரைவில் சேவையில் ஈடுபடுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## ஆர்ப்பாட்டம்

மலையகத்தின் பல பிரதேசங்களிலும் மண்ணெண்ணெய், பெட்ரோல், டீசல் கோரி ஆர்ப்பாட்டங்கள் நேற்றும் முன்னெடுக்கப்பட்டதுடன், நீண்ட வரிசைகளும் காணப்பட்டன.
( ரஞ்சித் ராஜபக்ஸ, காமினி இலங்காதிலக)















பசறை எரிபொருள் நிலையத்தில்

# ஓட்டோக்களுக்கு முன்னுரிமை

■ ராமு தனராஜா

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டினை கருத்தில்கொண்டு, பசறை பிரதேசத்தில் தமது பிரதான தொழிலாக ஓட்டோ செலுத்தும் சாரதிகளுக்கு, முன்னுரிமை யளிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு கூப்பன் அடிப்படையில் கிராமிய கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான எரிபொருள் நிரப்பும் நிலையத்தில், இந்த மாதம் 23ஆம் திகதி தொடக்கம் எரிபொருள் வழங்கப்பட்டு வருகின்றது.



இவ்வேலைத் திட்டமானது, கிராமிய கூட்டுறவு சங்கத் தலைவரின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திம்புள்ளையில் சர்ச்சைகளுக்கு மத்தியில்

# நிவாரணப் பொருள்கள் விநியோகம்

■ எஸ்.கணேசன்

இலங்கை மக்களுக்கு தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ள நிவாரண பொருட்கள், உரிய வகையில் பங்கிடப்பட வேண்டும் என வலியுறுத்தி, கொட்டகலை, திம்புள்ள பகுதியில் உள்ள இரு தோட்டங்களை சேர்ந்த மக்கள் நேற்று முன்தினம் (25) கவனயீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பெருந்தோட்டப்பகுதியில் வாழும் அனைத்து குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என திம்புள்ள மேல் மற்றும் கீழ் பிரிவு தோட்டங்களில் வாழும் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ள நிவாரணப் பொருட்களில் பெருந்தோட்டப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு அரிசி மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் திம்புள்ள பிரிவில் உள்ள ஏனைய 3 பிரிவுகளுக்கும் சர்ச்சைகளுக்கு மத்தியில் அரிசி விநியோகிக்கப்பட்டுள்ளது.



நேற்று முன்தினம் திம்புள்ள (மேல்) மற்றும் (கீழ்) டிவிசனில் உள்ள மக்களுக்கு அரிசி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நலன்புரி அதிகாரி அலுவலகம் ஊடாக விநியோகப்பணி இடம்பெற்றது.

இங்கு மொத்தமாக 460 குடும்பங்களுக்கு நிவாரணம் தேவை என்ற நிலையில் 225 குடும்பங்களே வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அதுவும் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு மட்டுமே வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டப்பகுதிகளில் வாழும் அனைத்து குடும்பங்களுக்கும் வழங்கப்படும் எனக் கூறப்பட்டுள்ள நிலையில், ஏன் இவ்வாறு ஓரவஞ்சணை காட்டப்படுகின்றது என கேள்வி எழுப்பினர். அனைவருக்கும் வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

“ பொருளாதார நெருக்கடியால் நாங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம். தோட்டத்தில் வேலை செய்பவர்களுக்கு மட்டுமே அரிசி என்றால், நாங்கள் மண்ணையா உண்பது - என மக்கள் கேட்டபோது,

“ முதற்கட்டமாகவே இந்த தேர்வு இடம்பெற்றது. இரண்டாம் கட்ட நிவாரணம் வந்ததும், அனைவருக்கும் வழங்கப்படும் என நிர்வாக தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹட்டன் நகரில்

# 10 பேர் குளவிக்கொட்டுக்கு இலக்காகினர்

■ சுதத்.எச்.எம்.ஹேவா

ஹட்டன் நகரில் குளவிக்கொட்டுக்கு இலக்காகி 10 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹட்டன் நகரிலுள்ள கட்டடமொன்றில் கட்டியிருந்த குளவிக் கூடொன்று கலைந்து பொதுமக்களை கொட்டியுள்ளன.

நேற்று முன்தினம் (25) மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், இதன்போது 10 பேர் தாக்குதலுக்கு இலக்காகி டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



இதில் 3 பெண்களும் 7 ஆண்களும் உள்ளடங்குவதாகவும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்துள்ளதுடன், தாக்குதலுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள், சிகிச்சை முடிந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

ஹட்டனில் அரச பணியாளர்களுக்கு

# லாஃப்ஸ் விநியோகம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் நகரில் உள்ள அரச நிறுவனங்களில் பணியாற்றும் லாஃப்ஸ் சமையல் எரிவாயு நுகர்வோருக்கு நேற்று முன்தினம் (25) சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

ஹட்டன் பிரதேசத்திலுள்ள அரச நிறுவனங்களின் பிரதானிகளால், லாஃப்ஸ் நிறுவனத்திடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய, இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.



இதற்கமைய, சுமார் 350 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

குறித்த அரச நிறுவனங்களில் தமது அலுவலகங்களில் பணியாற்றும் லாஃப்ஸ் சமையல் எரிவாயு பாவனையாளர் தொடர்பான பெயர் பட்டியல் சேகரிக்கப்பட்டு, அது சமையல் எரிவாயு முகவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அந்த பெயர் பட்டில்களுக்கு அமைய, லாஃப்ஸ் சமையல் எரிவாயு விநியோகம் முன்னெடுக்கப்பட்டது.

# எரிபொருளுடன் ஐவர் கைது

■ பாலித ஆரியவன்ஸ

கந்தகெட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பதுளுஓயா, ஹேவென்தாவ, பள்ளேவல, கரமெட்டிய ஆகிய பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது, எரிபொருளை அதிக விலைக்கு விற்பனை செய்த ஐவர் கைதுசெய்யப்பட்டனர்.

தமது வீடுகளில் வைத்தே குறித்த ஐவரும் எரிபொருளை விற்பனை செய்து வந்ததாகவும் கந்தகெட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 332 லீற்றர் டீசல், 53 லீற்றர் பெட்ரோல், 224 லீற்றர் மண்ணெண்ணெய் என்பன இதன்போது பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வட்டாரதென்ன பிரதேசத்தில் மலர்சாலை அமைக்க

# பிரதேசவாசிகள் எதிர்ப்பு

■ சேஹ்ன் சென்விரத்ன

கண்டி நகரசபைக்குட்பட்ட வட்டாரதென்ன பிரதேசத்தில் பொதுமக்கள் வசிக்கும் பகுதியில், மலர்ச்சாலை ஒன்றை அமைப்பதற்கு, பிரதேசவாசிகளால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வீடொன்றுக்குள் பிரபலமானவர்கள் இறந்தால், அவர்களுக்கு இறுதிக்கிரியைகளை முன்னெடுப்பதற்காக அங்கு மலர்சாலை அமைக்கப்படுவதாக பிரதேசவாசிகள் குற்றஞ்சுமத்துகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் கண்டி நகர பிரதான வைத்திய அதிகாரி பசன் ஜயசிங்கவிடம் வினவியபோது, இவ்வாறான மலர்ச்சாலை ஒன்றை அமைக்கும் போது, பின்பற்ற வேண்டிய நிபந்தனைகள் காணப்படுவதாகத் தெரிவித்த அவர், வட்டாதென்ன பிரதேசத்தில் மலர்சாலை ஒன்றை அமைப்பதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும் அதற்கு பிரதேசவாசிகள் கடும் எதிர்ப்பை தெரிவிப்பதாகவும் தெரிவித்தார்.

# தமிழக நிவாரணத்தில் பாரபட்சம் வேண்டாம்

■ நீலமேகம் பிரசாந்த்

தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ள நிவாரணங்கள், மலையகத்தில் வறுமை கோட்பாட்டின் கீழ் காணப்படுகின்ற அனைவருக்கும் பாரபட்சமின்றி வழங்க வேண்டுமென மலையக தொழிலாளர் முன்னணியின் அமைப்பு செயலாளர் சஞ்சய் லெட்சுமனார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இரண்டாம் கட்ட நிவாரணப் பொருட்கள் இலங்கையை வந்தடைந்துள்ளன. இந்நிலையில் கடந்த முறை முதலாம் கட்ட நிவாரண பொருட்களில் பெரும்பாலானவர்களுக்கு நிவாரண பொருட்கள் கிடைக்கப்பெறவில்லையென குற்றம் சாட்டினர். மேலும் பால்மா பொதிகள் வழங்கப்படாமல் வெறுமனே அரிசியை மற்றும் வழங்கியதாகவும் பல தோட்டங்களில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

எனவே, இம்முறை அவ்வாறான குற்றச்சாட்டுகளுக்கும் பிரச்சனைகளுக்கும் இடங்கொடுக்காது முழுமையான முறையில் ஆராய்ந்து, அனைவருக்கும் இந்த தமிழக நிவாரண பொருட்கள் பாரபட்சமின்றி வழங்கப்பட வேண்டுமென மலையக தொழிலாளர் முன்னணியின் அமைப்பு செயலாளர் சஞ்சய் லெட்சுமனார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



செந்தில் தொண்டமானின் தலையீட்டால்

# டெம்மேரியா தோட்ட மக்களுக்கு தீர்வு

தமிழக அரசாங்கத்தால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட நிவாரணப் பொருள்களை விநியோகிப்பதற்காக, தோட்ட நிர்வாகம் ஒன்றினால் பணம் அறவிடப்பட்டமை தொடர்பில் இலங்கைத் தொடர்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தலையிட்டு தீர்வைப் பெற்றுக்கொடுத்துள்ளார்.

இதற்கமைய, பசறை - டெம்மேரியா தோட்ட முகாமையாளரால், பொருட்களை ஏற்றி வந்த போக்குவரத்து செலவுக்கென மக்களிடம் 50 ரூபாய் பணம் வசூலிக்கப்பட்டு வருவதாக செந்தில் தொண்டான் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இதனையடுத்து செந்தில் தொண்டமான் தோட்ட முகாமையாளரைத் தொடர்பு கொண்டு உரையாடியதன் பின்னர், வசூலிக்கப்பட்ட பணத்தை உடனடியாக அந்தந்த தோட்ட மக்களிடம் திருப்பி வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மக்களை நடுரோட்டில் இழுத்துவிடும் அரசாங்கத்தின் தீர்மானம்

அடுத்தவேளைக்கு என்ன செய்வதென ஏக்கப் பெருமூச்சு விட்டிருந்தவர்களின் வயிற்றில் புளியைக் கரைத்தாற் போல, இவ்வேளைக்கு என்ன செய்வதென திமிரும் அளவுக்கு அரசாங்கத்தின் தீர்மானங்கள் அமைந்துள்ளன. வாராவாரம் அல்லது ஒவ்வொருநாளும் ஏதோவொரு பொருளின் விலை அதிகரிக்கப்படுகிறது.

ஒரு சில பொருட்களின் விலையேற்றம் அந்தந்த துறைகளைச் சார்ந்தவர்களுக்கும் அவர்களோடு தங்கிவாழ்வோர் மீதும் தாக்கத்தைச் செலுத்தும் ஆனால், எரிபொருட்களின் விலையேற்றம் ஒட்டுமொத்த மக்களையும் சேவைகளின் மீதும் பாரியளவில் தாக்கத்தைச் செலுத்தும்.

பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர், எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்ட போதெல்லாம், தங்களுடைய தேவைகளை குறைத்துக்கொண்டு வந்த சாதாரண மக்கள், அடுத்த கட்டத்தை நோக்கி சிந்திக்குமளவுக்கு எரிபொருள்களின் விலைகள் நேற்று (26) அதிகாலை முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதன்பின்னர், உணவுப்பொதி, உணவுப் பண்டங்கள், ஓட்டோ கட்டணங்கள் உள்ளிட்டவற்றின் விலை அதிகரிப்பு தொடர்பிலான அறிவிப்புகள் கிடுகிடுவென விடுக்கப்பட்டன. இதனால், தங்களுடைய தேவைகளில் எதனைக் குறைக்கலாமென மக்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டனர்.

பல ஹோட்டல்கள், சாப்பாட்டு கடைகள் இழுத்து மூடப்பட்டு, பலரும் வேலையிழந்து வீடுகளில் தங்கிவாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு குடும்பங்களிலும் தங்கிவாழ்வோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துகொண்டே செல்கின்றது. குடும்பச் சுமையை சுமக்கமுடியாது. ஒவ்வொரு குடும்பங்களின் தலைவன்களும் திமிருகின்றனர்.

பொருளாதார நெருக்கடிக்கு முன்னர், ஓர் உணவுப் பொதியை வாங்கினால், இரண்டொருவருக்கு அது போதுமானதாக இருந்தது. தற்போதைய பொதியில் கறிவகைகள் குறைந்துவிட்டன. அதேபோலே ஒருவருக்கு ஒருவேளைக்குக்கூட தாராளமாக இல்லை. இந்நிலையில், அந்தபொதியின் அளவு அதிலிருக்கும் மரக்கறிகள் போன்றவற்றை சிந்தித்துக்கூட பார்க்கமுடியாதுள்ளது.

பொருட்களின் விலைகள் மட்டுமன்றி சேவைகளின் கட்டணங்களும் அதிகரிக்கும். போக்குவரத்துக்கு மாற்றுமுறைகளை கையாண்டாலும் அவரச தேவைக்களுக்காக அல்லது நீண்டதூர பயணங்களுக்கு வாடகை வாகனங்களையே நம்பியிருக்கவேண்டி உள்ளது. ஆக, செலவுகள் இன்னுமின்னும் அதிகரிக்கும்.

தற்போதைய நிலைமையில் 20 சதவீதமான சிறுவர்கள் மந்தபோஷணையில் வாடுகின்றனர் என புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நிலைமை தொடருமாயின், அடுத்தடுத்த பரம்பரைகளைப் பற்றி சிந்திக்கவேண்டும். கர்ப்பிணிகளுக்கு போஷாக்கான உணவுகள் முறையாக கிடைப்பதில்லை என்பதால், அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

விலை அதிகரிப்பு, பொருட்களுக்கான தட்டுப்பாடு, மனத்தில் ஒரே யோசனை இப்படியாக ஒவ்வொரு மனிதனின் மீதும் திணிக்கப்படும் சுமைகளால், மன உளைச்சலுக்கு பலரும் உள்ளாகிக் கொண்டிருக்கின்றனர். குடும்ப வன்முறைகள் உள்ளிட்ட இன்னும் பல சமூக விரோத செயற்பாடுகளும் அதிகரித்துள்ளன.

அரசாங்கத்தினால் எடுக்கப்படும் விலை அதிகரிப்பு தீர்மானங்கள் மக்களை நடுவீதியில் இழுத்துவிட்டு அநாதைகளாக்கி விட்டுள்ளது என்பதே எமது அவதானிப்பாகும். அதிலிருந்து மீண்டெழ அதிரடியான திட்டங்களை வகுப்பதே காலத்தின் தேவையாகும். என்பதை கவனத்தில் கொள்க.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# பொய் பொய் பொய்




என்.கே.அஷோக்பரன்
Twitter: @nkashokbharan


இந்தா இன்றைக்கு எரிபொருள் கப்பல் வருகிறது. இல்லை, ஒரு சின்ன சிக்கல், ஒருநாள் கழித்துத்தான் எரிபொருள் கப்பல் வரும். இல்லை கப்பல் அடுத்த இரண்டு நாட்களுக்கு வராது. இப்படி வராத கப்பல், இன்றைக்கு வருகிறது, நாளைக்கு வருகிறது என்று ஆயிரம் பொய்க்கதைகளை சொல்லி தனக்கிருந்த கொஞ்ச மரியாதையையும் கெடுத்துக்கொண்டிருக்கிறார் இலங்கையின் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர.

ஆனால் இத்தகைய பொய்களைச் சொன்ன முதல் அமைச்சரும், அரசியல்வாதியும் காஞ்சன அல்ல. அரசியல்வாதி என்றாலே பொய்தான் சொல்லுவான் என்று மக்கள் உறுதியாக நம்பும் அளவுக்கு அரசியல்வாதிகள் பொய் சொல்வது ஏன்? அப்படி பொய் சொல்லும் அரசியல்வாதிகளை மக்கள் தொடர்ந்தும் நம்புவது ஏன்? என்பதெல்லாம் சுவாரசியமான கேள்விகள்.

அரசியல்வாதிகள் பொய் சொல்வதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. இதைப்பற்றி கருத்துரைத்த ஜொனதன் றோச், "அரசியலில் போலித்தனமும் இரட்டைப் பேச்சும் கருவிகள். ஜனாதிபதி ரிச்சர்ட் எம். நிக்சன் வோட்டர்கேட் சர்ச்சைக்கு உடந்தையாக இருந்ததை மறுத்தபோது, அது தவறான முறையில், சட்டவிரோதமாக அல்லது தனிப்பட்ட ஆதாயத்திற்காக செய்ததை மறைக்கச் சொன்ன பொய், ஆனால் ஒரு பொது நோக்கத்திற்காகவும் பொய் சொல்லப்படலாம்.

ஆப்ரஹாம் லிங்கனின் விஷயத்தைப் பொருத்தவரையில், அது உள்நாட்டுப் போரைத் தடுப்பதற்கான நியாயமான பொது நோக்கங்களுக்காக சொல்லப்பட்டதைப் போன்று. மேலும் அமெரிக்க கௌரவத்தையும் பாதுகாப்பையும் பாதுகாக்க, அமெரிக்க உளவு விமானத்தை சோவியத் யூனியன் சுட்டு வீழ்த்தியதை ஜனாதிபதி டுவைட் டி. ஐசன்ஹோவர் மறுத்தது போலவும் பொய் சொல்லப்படலாம்

தனிப்பட்ட முறையில் ஒரு நிலைப்பாட்டை எடுத்துவிட்டு, அதை பொதுவில் சரிசெய்வது அல்லது மறுப்பது பாசாங்குத்தனமா? நிச்சயமாக. ஆனால் பொது மற்றும் தனிப்பட்ட முகங்களை தனித்தனியாக பராமரிப்பது நாம் அனைவரும் தினமும் செய்யும் ஒன்று. எரிச்சலூட்டும் உறவினர்களிடம் நாங்கள் அவர்களின் வருகையால் மகிழ்ந்தோம் என்று சொல்கிறோம், மோசமான சேவையை வழங்கிய தகுதியற்ற பணியாளர்களுக்கு நன்றி கூறுகிறோம், மேலும் தவறு என்று எங்களுக்குத் தெரிந்தே உயரதிகாரிகளுடன் உடன்படுகிறோம்" என்கிறார் அவர்.

ஒப்பந்தங்கள், பேச்சுவார்த்தைகள் மற்றும் இராஜதந்திர சூழ்ச்சிகளை எளிதாக்குவதற்கு அரசியல் போலித்தனம், பாசாங்குத்தனம், இரட்டைப்பேச்சு, மற்றும் பொய் சில சமயங்களில் அவசியமான கருவியாக இருக்கிறது என்பதை றோச் சுட்டிக்காட்டுவது முற்றிலும் சரியானது. வள்ளுவன் சொன்னது போல பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின். ஆனால் யாருக்கு நன்மை பயக்கும் என்பது இங்கு முக்கியமானது.

இங்கு நன்மை என்பது பொதுநன்மை. ஆனால் அரசியல்வாதிகள் மேற்சொன்ன காரணங்களுக்காகவும், பொது நன்மைக்குமாகவும் மட்டும்தான் பொய் சொல்கிறார்களா? இல்லை. பல சமயங்களில் தனிப்பட்ட நலன்களுக்கும், அரசியல் ஆதாயங்களுக்குமாகத்தான் பொய்களைக் கட்டவிழ்த்து விடுகிறார்கள்.

அரசியல்வாதிகளின் பொய்களுக்கு லட்சோபலட்சம் உதாரணங்கள் இருக்கின்றன. அதில் அண்மைக்காலத்தில் ஒரு தனிமனிதனின் வாழ்வையும், அவரது குடும்பத்தின் நிம்மதியையும் சீரழித்த பொய் என்றால், அது டொக்டர் ஷாஃபி முஸ்லிம் மக்கள் அல்லாதவர்களுக்கு கருத்தடை செய்கிறார் என்று கோட்டாவின் ஆட்சியில் அமைச்சராக இருந்த சன்ன ஜயசுமன உள்ளிட்ட பலரும் சொன்ன பொய்யைக் குறிப்பிடலாம்.

இனவாதம் பரப்பிய கோட்டாவினது இனவெறிக் கும்பல், இந்த இனவாதப் பொய்யினால், ஷாஃபி என்ற அப்பாவி வைத்தியர் மீது மட்டுமல்ல, முஸ்லிம் சமூகத்தின் மீதே வேண்டாத ஒரு வெறுப்பு உருவாக்கப்பட்டது. "சிங்கள-பௌத்த" இனவாதத்தை முன்னிறுத்தி வாக்குவேட்டை நடத்த விளைந்த கோட்டா குழுமத்துக்கு இந்த இனவெறிச் சதி, அந்த வாக்குவேட்டைக்கு அவசியமானதொன்றாக இருந்தது. இன்று அந்தப் பொய் தகர்ந்துபோயிருக்கிறது. பொய் சொன்ன சன்ன ஜயசுமன உள்ளிட்டோர் இன்று பதவிகளைப் பற்றிப்பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் வைத்தியர் ஷாஃபியும் அவரது குடும்பமும் அனுபவித்த வலிகளுக்கு என்ன மாற்று கிடைக்கப்போகிறது?

இப்படி ஆயிரமாயிரம் இனவாதவெறி நிறைந்த பொய்களையும், புரட்டுக்களையும் அதன்பாலான கடுமையாக எதிர்வினைகளையும் இலங்கையில் சிறுபான்மையினர் காலங்காலமாக அனுபவித்தே வந்திருக்கிறார்கள்.

தமிழனென்றால் "புலி", "பயங்கரவாதி" என்று எத்தனை கட்டுக்கதைகள்! எத்தனை இளைஞர்கள் மறியலில் தங்கள் இளமையைத் தொலைத்துவிட்டுக்கிடக்கிறார்கள். இதில் அரசியல்வாதிகளை மட்டும் பிழை சொல்லியும் அர்த்தமில்லை. ஏனென்றால், அவர்கள் சொன்னது பொய் என்று எத்தனை தரம் நிரூபிக்கப்பட்டாலும், மீண்டும், மீண்டும் அவர்கள் சொல்லும் பொய்களுக்குள் விழுந்துகொண்டேயிருக்கும் முட்டாள் மக்கள் கூட்டமொன்று இருக்கும்வரை அவர்களும் பொய்களைச் சொல்லிக் கொண்டேயிருப்பார்கள்.

றொஜர் கூப்மன் சொல்வதுபோல, பொய் மற்ற நபரைப் பாதிக்கிறது, மேலும் அவர்களின் உரிமைகளை மீறுகிறது. இது தார்மீக ரீதியாகவும் நெறிமுறை ரீதியாகவும் திருட்டுக்கு சமம். ஒரு நபரின் மனதை நீங்கள் பொய்யால் நிரப்பும்போது - உண்மையைப் பொய்யால் மாற்றினால் - நீங்கள் உண்மையில் அவர்களிடமிருந்து திருடுகிறீர்கள். ஒருவர் துப்பாக்கி முனையில் உங்கள் பணத்தை திருடும் போது குறைந்த பட்சம், ஒரு திருட்டு நடந்திருப்பது உங்களுக்குத் தெரியும்.

ஆனால் உங்களிடம் உண்மையைச் சொல்வதாக நீங்கள் நம்பும் ஒருவர் உண்மையில் பொய்களைச் சொல்லும்போது, அவர்கள் உங்கள் நம்பிக்கையைப் பயன்படுத்தி உங்களை பாதுகாப்பற்றவர்களாக விட்டுவிடுகிறார்கள். ஒரு வகையில் பார்க்கப்போனால், அரசியல்வாதிகள் சொல்லும் பொய்கள், அவர்கள் கொள்ளையடிப்பதை விட ஆபத்தானது.

அரசியல்வாதிகள் ஏன் பொய் சொல்கிறார்கள்? இதற்கு மிக முக்கிய காரணம் மக்கள் பொய்களால் கவரப்படுகிறார்கள். மக்கள் உண்மையைப் பற்றி யோசிக்க நேரமெடுப்பதில்லை. மக்கள் வதந்திகளை நம்ப விரும்புகிறார்கள். இணையம், சமூக ஊடகம் என எல்லாவிடத்திலும், மக்கள் வதந்திகளை விரும்பிப் படிக்கிறார்கள். அது அவர்களுக்கு கிளுகிளுப்பூட்டுகிறது. அதன் உண்மைத்தன்மை பற்றி அவர்களுக்குக் கவலை இல்லை. இதனால் அரசியல் உலகில், பொய் வேலை செய்கிறது. "உண்மை அதன் உடையை அணிவதற்கு முன்பு ஒரு பொய் உலகம் முழுவதும் சுற்றி வருகிறது" என்பது பழமொழி. அதுதான் உண்மையும் கூட.


கடினமான, கசப்பான, வலிமிகுந்த உண்மையை சொல்வது மக்களுக்குப் பெரிதும் பிடிப்பதில்லை. உண்மை எப்போது அழகாக இருப்பதில்லையே! வாய்மையே வெல்லும், உண்மையே பேசு என பெறுமதிகளைக் கொண்ட சமூகம் கூட, கசப்பான உண்மைகளை விரும்புவதில்லை போலும்! தீபாவளிக்குத் தீர்வு, பொங்கலுக்குத் தீர்வு என்று பேய்க்காட்டுதலை நம்பிக்கையூட்டுதல் என்று புரிந்துகொள்ளும் மனிதர்களும் இங்கு இல்லாமல் இல்லை.

இன்றுள்ள அரசியல் கட்டமைப்பின்படி, அரசியல்வாதிகள் மக்களை ஏமாற்றுதல் தவிர்க்க முடியாததாக இருக்கலாம். பொய் சொல்ல மறுக்கும் மற்றும் பொது அறியாமையை சுரண்டிக் கொள்ளாத அரசியல்வாதிகள், குறைவான ஒழுக்கமும், தராதரமும், பெறுமதியும் உள்ள அரசியல்வாதிளுடன் ஒப்பிடும்போது கட்டமைப்பு ரீதியாக பின்தங்கிய நிலையில் உள்ளனர்.

மேலும், அதன் காரணமாக குறைவான தேர்தல்களில் வெற்றி பெறுகிறார்கள். நேர்மையற்ற அரசியல்வாதிகளை வெறுக்கும் அதே வாக்காளர்கள், அந்தப் பொய்களையே மூலதனமாகக் கொண்ட அரசியல்வாதிகளை ஆதரிக்கிறார்கள், வாக்களிக்கிறார்கள். அதிலும் குறிப்பாக அந்த அரசியல்வாதிகளின் பொய்கள் குறித்த வாக்காளர்களின் முன்முடிவுகளை வலுப்படுத்தும் போது, உண்மையைப் பற்றி ஆராயமல், அவர்கள் அந்த அரசியல்வாதிகளை ஆதரிக்கிறார்கள்.

ஆகவே நேர்மையான அரசியல்வாதிகள் வேண்டும், உண்மையைப் பேச வேண்டும் என்று பேச்சுக்குச் சொல்லும் மக்கள்கூட, உண்மையான அரசியல்வாதிகளை ஆதரிக்காது, பொய்பேசும் அரசியல்வாதிகளின் பொய்களுக்கு எடுபட்டு, அவர்களையே ஆதரிக்கிறார்கள். பொய்யால் ஆதரவு கிடைக்குமென்றால், வாக்கு கிடைக்குமென்றால், பதவி கிடைக்குமென்றால், எந்த அரசியல்வாதிதான் பொய் பேச மாட்டான்! பொய்யிற்கு நற்பலனை வழங்கும் சமூகமொன்றில், உண்மை செத்துத்தான் போகும்.

மக்கள் ஒரு விஷயத்தை மறந்துவிடக் கூடாது, உங்களுக்கு பிடித்த அரசியல்வாதிகள் பொய் சொல்வதை சகித்துக்கொள்வது, அந்தப் பொய்யில் நீங்களும் பங்கேற்பதற்கு சமம். உங்கள் தார்மீக குருட்டுத்தன்மை அந்தக் குருட்டுத்தன்மைக்கேற்ற அரசாங்கத்தைப் பெற வழிவகுக்கும் போது, அதற்குப் பிறகு அழுது புலம்புவதில் பயனில்லை.



## வாழ்வியல் தரிசனம்

ஞானத்தைத் தேடுபவர்களில் பலர் ஆசைகளைப் பெருக்கியபடியேதான் இருக்கின்றார்கள். ஞானம் என்பது கடைச்சரக்கு அல்ல; அறிவுக்கும் மேலான மெய் அறிவு.

சாதாரணமான விடயமாக ஆன்ம ஞானத்தை நினைத்தலாகாது. பூரணத்துவமானவர்கள் மௌனமானவர்களாக இருக்கிறார்கள்.

ஆனால், அதிகம் பேசி மக்களைக் குழப்பும் 'சுவாமி'கள் என்று தங்களைத் தாங்களே முத்திரை குத்திக் கொள்பவர்கள் அதிகமாகி விட்டார்கள்.

எதையும் எதிர்பாராத, சுயநலன் எதுவும் அற்ற, ஆசைகளோடு இணையாத, தூயநெஞ்சு உடைய மனிதனே, ஆன்மிகம் பற்றிப் பேசுவதற்கு உரிமை உள்ளவன் ஆவான்.

செல்வம், புகழ், அதிகாரம் உள்ளவர்கள் பின்னால் செல்பவர்களால், ஆன்ம அறிவு பெறுவது எப்படி?

சகல கல்வியறிவையும் மக்கள் தேடிப் பெற வேண்டும். கல்வி ஒருவருக்கு அவசியமானது. பெற்ற கல்வியைப் புனிதமாகக் கொண்டு இயங்க வேண்டும்.

எளியோருக்கு இரங்குதல், வசதியற்றவர்களுக்கு இலவச கல்வியூட்டல், பொதுநல சேவை எல்லாமே தர்மத்துடன் இணைந்தவை. ஆன்ம எழுச்சியை உருவாக்குக!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### நெற்செய்கை பாதிப்பு

சிறுபோக செய்கை திருகோணமலை மாவட்டத்திலும் இம்முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆனாலும் பசளை தட்டுப்பாட்டால், உரிய விளைச்சலை பெற முடியாதுள்ளது என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். 50 கிலோகிராம் நிறையைக் கொண்ட பசளை 1,500 ரூபாவாக இருந்தது. அதன் தற்போதைய விலை, 42 ஆயிரம் ரூபாயாகும். இதனால் பசளையைக் கொள்வனவு செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

கந்தளாய் குளத்தை மட்டுமே நம்பி சிறுபோக, பெரும்போக செய்கைகள் என, சுமார் 22ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. இதில் தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவை உள்ளடக்கிய வகையில் மொத்தமாக 8,844 ஏக்கர் நிலப்பரப்பில் சிறு குளங்களை நம்பியும் நெற் செய்கை பண்ணப்படுகிறது. இதில் 3889 விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

அதிகளவில் விவசாய செய்கையில் ஈடுபட்டாலும் உரிய நேரத்திற்கு உரம் கிடைக்காமை பாரிய சிக்கல்களை சந்திக்க நேரிடும் எனவும் விவசாய துறையில் வீழ்ச்சி ஏற்பட்டு விடும் எனவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். ஆகையால், யூரியா உரம் போன்றவற்றை தங்களுக்குப் பெற்றுத்தருமாறும் விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(ஹஸ்பர்)

சூழலுக்கு நட்பான நிலைபேறான திட்டங்களை

# SLT-MOBITEL முன்னெடுப்பு

காலநிலை மாற்றத்துக்கு எதிரான போராட்டத்துக்காக, நிலைபேறான சமூக ஆளுகை (ESG) நிகழ்ச்சிகளை முன்னெடுப்பதில் தன்னை அர்ப்பணித்துள்ள SLT-MOBITEL, சர்வதேச சூழல் தினத்தை அனுஷ்டித்திருந்தது. இதற்கமைய, மீரிகம பகுதியில் தனது 5ஆவது நாட்டிலுப்பை மர நடுகைத் திட்டத்தை முன்னெடுத்திருந்தது. தேசிய மட்ட மர நடுகைத் திட்டத்தை SLT-MOBITEL முன்னெடுத்திருந்ததுடன், அதனூடாக வளித் தூய்மையாக்கல், வனாந்தரச் செய்கையை ஊக்குவித்தல், காபன் நடுநிலையாக்கம் மற்றும் பச்சை இல்ல வாயுக்களை குறைத்தல் மற்றும் உயிரியல் பரம்பலை பேணுதல் போன்றவற்றை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு இந்தத் திட்டத்தை முன்னெடுத்திருந்தது.



நிலைபேறாண்மை தொடர்பில் தனது அக்கறையை வெளிப்படுத்தும் SLT-MOBITEL, பசுமையான புவியின் முக்கியத்தை உணரந்துள்ளதுடன், ஆரோக்கியமான தாவரங்களினூடாக மனித சுகாதாரத்துக்கு கிடைக்கும் நேரடி அனுகூலங்கள் மற்றும் இயற்கையை பேணுவது, எதிர்காலத் தலைமுறைகளுக்காக காலநிலை மாற்றத்தை தணித்து, சீராக்குவது போன்றவற்றுக்கும் பங்களிப்பு வழங்குகின்றது.

"தூய வளி மற்றும் உரத்தினூடாக நாட்டுக்கு வளமூட்டுவோம்" எனும் தொனிப் பொருளின் கீழ் அறிமுகம் செய்யப்பட்டிருந்த இந்தத் திட்டம், திரண்ட நலனுக்காக சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தில் கவனம் செலுத்துவதாக அமைந்துள்ளது.

களை கட்டுப்படுத்தலுக்கு நாட்டிலுப்பை மரம் பங்களிப்பு வழங்குவதாக நம்பப்படுகின்றது. சேதனப் பசளை தயாரிப்புக்கும் பயன்படுத்தப்படுவதுடன், வளியை தூய்மைப்படுத்தவும், மருந்துவ குணம் மிக்க தாவரமாகவும் கருதப்படுகின்றது. இதுவரையில் SLT-MOBITEL இனால் 1000க்கும் அதிகமான தாவரங்கள் மொனராகலை, உமந்தாவ, அனுராதபுரம் மற்றும் கண்டி ஆகிய பகுதிகளில் நாட்டப்பட்டுள்ளன.

சர்வதேச சூழல் தினம் வருடாந்தம் ஜூன் மாதத்தில் அனுஷ்டிக்கப்படுவதுடன், சூழல் பாதுகாப்பு தொடர்பான செயற்பாடுகள் மற்றும் விழிப்புணர்வை ஊக்குவிக்கும் ஐக்கிய நாடுகளின் பிரதான மிகைப்பியாகவும் பயன்படுத்தப்படுகின்றது. இந்த நிகழ்வை முன்னிட்டு, SLT-MOBITEL இனால் அதன் தலைமையகத்தில் விசேட நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. SLT-MOBITEL ஊழியர்களுக்கு தாவரக் கன்றுகள் விநியோகிக்கப்பட்டிருந்தன. மேலும், நிறுவனம் தனது 5ஆவது நாட்டிலுப்பை தாவரக் கன்றுகள் நடுகைத் திட்டத்தை மீரிகம செத் செவன முதியோர் இல்லத்தில் வெற்றிகரமாக முன்னெடுத்திருந்தது. இந்தத் திட்டத்துக்கு வலிமை சேர்க்கும் வகையில், உள்நாட்டு சமூகத்தாருடனும், கிராமிய மட்டத்தில் செயலாற்றும் நிறுவனங்களுடனும் நேரடியாக SLT-MOBITEL செயலாற்றுவதுடன், மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு வாய்ப்புகளை வழங்க முன்வந்திருந்தது.

காடழிப்பை தவிர்ப்பது மற்றும் வளியிலிருந்து காபனீரொட்சைட் வாயுவை இயற்கையாகவே அகற்றுவது போன்றன இந்தத் திட்டத்தின் பிரதான உள்ளம்சங்களாகும். பச்சை இல்ல வாயுக்கள் வெளியேற்றத்தைக் குறைப்பது, சிறந்த வாயு தூய்மையாக்கம், நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் உயிரியல் பரம்பலை உறுதி செய்தல், அதிகளவு சேதன உரத் தயாரிப்பு மற்றும் நாட்டிலுப்பை மரங்களை பாதுகாப்பதன் முக்கியத்துவம் தொடர்பில் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இந்தத் திட்டத்தினூடாக இலக்கு வைக்கப்பட்டுள்ளன. நாட்டப்படும் ஒவ்வொன்று மரக் கன்றினதும் வளர்ச்சியைக் கண்காணிப்பதற்கு SLT-MOBITEL இனால் நவீன தொழில்நுட்ப முறைமை பின்பற்றப்படுகின்றது. 'THURU' மொபைல் அப்ளிகேஷனினூடாக, இந்தத் திட்டம் எந்தளவு வெற்றிகரமானதாக அமைந்துள்ளது என்பதை கண்டறியும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சூழல் பாதுகாப்பு தொடர்பில் தனது அர்ப்பணிப்பை உறுதி செய்து, இதர செயற்திட்டங்களான e-கழிவு குறைப்பு மற்றும் காபன் வெளியீட்டைக் கட்டுப்படுத்தும் திட்டங்களிலும் SLT-MOBITEL ஈடுபட்டுள்ளது. பொறுப்பு வாய்ந்த கழிவு முகாமைத்துவம் என்பது மீள்-பாவனை மற்றும் மீள்சுழற்சி போன்றவற்றினூடாக முன்னெடுக்கப்படுவதுடன், தற்போது முன்னெடுக்கப்படும் உறுதியான செயற்பாடுகளினூடாக நிறுவனத்தினதும், வாடிக்கையாளர்களினதும் காபன் வெளிப்பாடு குறைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

ருஹுணு வைத்தியசாலை Cath Lab

## ஆய்வுகூடத்தை நிறுவ ரூ. 250 மில்லியன் முதலீடு

தென் மாகாணத்தில் இயங்கும் Ruhunu Hospital (Pvt.) Ltd, தென்னிலங்கையில் முதலாவது தனியார் துறை Cath Lab ஆய்வுகூடத்தை ஆரம்பித்து வரலாறு படைத்துள்ளது.

மருத்துவமனையானது Philips Cath Lab இயந்திரத்திற்காக ரூ. 250 மில்லியனை முதலீடு செய்துள்ளது. இது உலகளவில் முன்னணி இருதய சிகிச்சை வழங்கல் இயந்திரமாக உள்ளது. உறைந்த இரத்தத்தை அகற்றுதல் (Percutaneous coronary intervention - PCI) போன்ற இரத்தக் குழாய் நிலைமைகளைக் கண்டறிதல் மற்றும் சிகிச்சையளிப்பதற்கான Catheterization சிகிச்சை மற்றும் ஒழுங்கற்ற இதயத் துடிப்பைக் கண்டறிதல் மற்றும் சிகிச்சை செய்தல் (Temporary pacemaker -TPM) போன்ற பல்வேறுபட்ட சேவைகளை நோயாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

Cath Lab ஆய்வுகூடத்தை ஆரம்பித்ததன் மூலம், இலங்கையில் iFR தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் முதலாவது தனியார் துறை மருத்துவமனையாக ருஹுணு மருத்துவமனை மாறியுள்ளது. iFR முறையானது நோயறிதல் மற்றும் சிகிச்சை நடைமுறைகளில் குருதி அமுக்கத்தை அளவிட பயன்படுவதுடன், Philips ஆல் மாத்திரமே வழங்கப்படுகிறது. Philips iFR சுகாதார பராமரிப்பில் தங்கத் தரநிலையாகக் கருதப்படுவதுடன், ACC/AHA/SCAI (American College of Cardiology/ American Heart Association/Society for Cardiovascular Angiography and Interventions) ஆல் உயர்மட்ட மருத்துவச் சான்றுகளின் அடிப்படையில் அதன் துல்லியத்திற்காக Class IAபரிந்துரையைப் பெற்றுள்ளது.

அனைத்து நோயாளிகளுக்கும் உயர் தரமான மருத்துவ சேவையை வழங்குவதில் ருஹுணு மருத்துவமனையின் அர்ப்பணிப்புக்கு புதிய Cath Lab ஒரு சான்றாகும். Cath Lab மிகவும் திறமையான மற்றும் தொழில்முறை தகைமை கொண்ட பணியாளர்களால் பேணிப் பராமரிக்கப்பட்டு, மிக உயர்ந்த தரமான சேவையை வழங்கும் அர்ப்பணிப்புடன் எப்போதும் இருக்கும் என்பதை நோயாளர்கள் உறுதியாக நம்பலாம். நாடளாவிய ரீதியில் பயிற்சியளிக்கும் மிகவும் அனுபவம் வாய்ந்த வெளிநாட்டு பயிற்சி பெற்ற இருதய நோய் வைத்திய நிபுணர்களால் Cath Lab இயக்கப்படும். சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட மயக்க மருந்து வைத்திய நிபுணர்கள் இந்த நடைமுறைகளின் ஒரு பகுதியாக இருப்பார்கள். ருஹுணு வைத்தியசாலையில் இருதய சிகிச்சைப் பிரிவில் அனுபவம் வாய்ந்த தாதியர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

தென் மாகாணத்தில் உள்ள நோயாளர்கள், இதே சேவைக்காக கொழும்புக்கு பயணிப்பதால் ஏற்படும் சிரமங்களையும் செலவுகளையும் தலையில் சுமக்க வேண்டிய அவசியமில்லை என்பதால், Cath Lab அறிமுகப்படுத்தப்படுவதன் மூலம் அவர்கள் பெரிதும் பயனடைவார்கள். தென் மாகாணத்தின் மருத்துவ மையத்தில் அமைந்துள்ள ருஹுணு வைத்தியசாலையானது அனைத்து நோயாளர்களுக்கும் வழங்கப்படும் பிரத்தியேக கவனிப்புடனான சிகிச்சைக்காகப் புகழ்பெற்றது. ருஹுணு மருத்துவமனை மொத்தம் 09 ICU, HDU மற்றும் CCU படுக்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.



Cath Lab இன் ஆரம்பம் குறித்து கருத்து தெரிவித்த இணை - பிரதம நிறைவேற்று அதிகாரி ரவீன் விக்ரமசிங்க, 'தென் மாகாணத்தில் வசிப்பவர்களின் அதிகரித்து வரும் இருதய சுகாதாரப் பராமரிப்பு தேவைகளை பூர்த்தி செய்வதற்காக புதிய அதிநவீன Cath Lab ஆய்வுகூடத்தில் கணிசமான தொகையை முதலீடு செய்துள்ளோம். தென் மாகாணத்தில் முன்னணி சுகாதாரப் பராமரிப்பு சேவை வழங்குனராக ருஹுணு வைத்தியசாலையின் 27 வருட பயணத்தில் இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனை இலக்காகும். ஈடிணையற்ற சுகாதார பராமரிப்பு சேவைகளை நாங்கள் தொடர்ந்து வழங்குவோம்,' என்று குறிப்பிட்டார்.

இணை - பிரதம நிறைவேற்று அதிகாரியான ஜனித் லியனகே கருத்துத் தெரிவிக்கையில், 'தென் மாகாணத்தில் உள்ள நோயாளர்களுக்கு சிறந்த Cath Lab வசதிகளை வழங்க முடிந்ததில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ருஹுணு வைத்தியசாலையின் மருத்துவ சேவைகளில் ஈட்டியுள்ள சிறந்த நற்பெயரைக் கொண்டு, நோயாளர்கள் எமது இருதய நோய் வைத்திய நிபுணர்கள் மூலம் நிபுணத்துவ ஆலோசனை மற்றும் சிகிச்சையைப் பெறுவதில் நம்பிக்கையுடன் இருக்க முடியும். நாங்கள் கடினமாக உழைத்து, தென் மாகாணத்தில் உயர்தர சுகாதார பராமரிப்பு சேவை வழங்குனராக எங்களின் அந்தஸ்தை தொடர்ந்து உறுதிப்படுத்துவோம்,'என்று குறிப்பிட்டார்.

அ.தி.மு.க பொதுக்குழுக்கூட்டம்

சென்னை:

# இபிஎஸ், ஓபிஎஸ் தரப்புக்கள் இழுபறி

அண்ணா திராவிட முன்னேற்ற கழக (அ.தி.மு.க) பொதுக்குழு கூட்டத்தை, ஏற்கெனவே அறிவித்தபடி ஜூலை 11ம் திகதி நடத்துவதற்கான பணிகளை எடப்பாடி பழனிசாமி (இபிஎஸ்) தரப்பினர் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

அதே நேரத்தில் அக்கூட்டத்தை தடுத்து நிறுத்த ஓ.பன்னீர்செல்வம் (ஓபிஎஸ்) தரப்பினர் சட்ட வல்லுநர்களுடன் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

அ.தி.மு.க.வில் கடந்த ஜூன் 14 ஆம் திகதி சென்னையில் நடைபெற்ற மாவட்ட செயலர்கள் கூட்டத்தில் ஒற்றைத் தலைமை விவகாரம் வெடித்தது.



அப்போதுமுதல் ஓபிஎஸ், இபிஎஸ் அணிகள் இடையே ஒற்றைத் தலைமை விவகாரம் சூடு பிடித்தது. இரட்டை தலைமைதான் வேண்டும் என்பதில் ஓபிஎஸ் தரப்பு வலியுறுத்திவருகின்றது.

இபிஎஸ் தலைமையில் ஒற்றைத் தலைமை என்பதில் இபிஎஸ் தரப்பும் உறுதியாக உள்ளன. எனினும், இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு எம்ஜிஆர் காலத்து மூத்த தலைவரான கே.ஏ.செங்கோட்டையன் மற்றும் தம்பிதுரை உள்ளிட்டோரின் சமரச முயற்சிகளை மேற்கொண்டனர். அந்த முயற்சிகள் யாவும் தோல்வி அடைந்தன.

பொதுக்குழுவிலாவது தீர்வு கிடைக்கும் என்று தொண்டர்கள் எதிர்ப்பார்த்திருந்தனர். ஆனால் 23ஆம் திகதி அதிகாலை வரை சென்னை உயர்நீதிமன்றத்தில் விடிய விடிய நடைபெற்ற மேல்முறையீட்டு வழக்கில், புதிய தீர்மானங்களை நிறைவேற்றக்கூடாது என்ற நிபந்தனையுடன் பொதுக்குழு கூட்டத்தை நடத்த நீதிமன்றம் உத்தரவிட்டது.


இளம்பெண் மீதான மோகத்தால்

பெங்களூர்

## மோசடி வலையில் சிக்கிய வங்கி மேலாளர்

வாடிக்கையாளர்களின் பணத்தை கையாடல் செய்து, 'டேட்டிங்'ஆப் மூலம் பழக்கமான இளம்பெண்ணிடம் ரூ.5.7 கோடியை வங்கி மேலாளர் இழந்துள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்து, அந்த வங்கி மேலாளரை கைது செய்து பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

பெங்களூரு அனுமந்தநகர் பகுதியில் இந்தியன் வங்கியின் மேலாளராக பணிபுரிந்து வருகின்ற வங்கி மேலாளர் குடும்பத்துடன் வசித்து வருகிறார். அந்த வங்கியின் வாடிக்கையாளரான இளம் பெண்ணொருவர் தனது கணக்கில் ரூ.1.3 கோடியை வைப்பிலிட்டுள்ளார். இந்த தொகையை வைத்து அவர் ரூ.75 லட்சம் கடனாகவும் பெற்றுள்ளார்.



இந்நிலையில், அந்த பெண்ணின் ஆவணங்களை போலியாக பயன்படுத்தி பல கட்ட தவணைகளாக ரூ.5.7 கோடி கடனாக பெறப்பட்டுள்ளது. இந்த விவரம் அந்தப் பெண்ணுக்கு தெரியவரவே, இது குறித்து முறைப்பாடு செய்துள்ளார். அதுகுறித்த விசாரணையின் வங்கியின் மேலாளரே இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

வேலூர்:

## இலவச பஸ்ஸால் பலகோடி நட்டம்



பெண்களுக்கு இலவச பஸ் பயண திட்டத்தால் தமிழக அரசுக்கு நாள் ஒன்றுக்கு பல கோடி நஷ்டம் ஏற்படுகிறது என நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்தார்.

வேலூர்மாவட்டம் காட்பாடி மெட்டுக்குளம் கிராமத்தில் மாற்றுக்கட்சியினர் திராவிட முன்னேற கழகத்தில் (தி.மு.க) இணையும் நிகழ்ச்சி அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நடைபெற்றது. அந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெண்களுக்கு இலவச பஸ் பயண திட்டத்தால் தமிழக அரசுக்கு நாளொன்றுக்கு பல கோடி நஷ்டம் ஏற்படுகிறது. இருந்தாலும் தமிழக அரசு தொடர்ந்து இந்த திட்டத்தை செயல்படுத்தி வருகிறது எம்.எல்.ஏ.வாக இத்தனை ஆண்டு காலம் நான் இருந்தாலும் மது அருந்தும் பழக்கம் என்னிடமில்லை என்றார்.

லக்கிம்பூர்

## பெண் ஆசிரியரை செருப்பால் அடித்து தாக்கும் பள்ளி முதல்வர்



பள்ளிக்கு தாமதமாக வந்த காரணத்திற்காக ஆசிரியை ஒருவர் செருப்பால் தாக்கப்பட்ட அதிர்ச்சிக்குரிய சம்பவம் உத்தரப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. உத்தரப் பிரதேச மாநிலம் லக்கிம்பூர் கேரி பகுதியைச் சேர்ந்த பள்ளியில் பணியாற்றும் பெண் ஆசிரியர் ஒருவர் பள்ளிக்கு 10 நிமிடம் தாமதமாக வந்துள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த அந்த பள்ளியின் முதல்வர் அஜித் வர்மா, தாமதமாக வந்ததற்காக பெண் ஆசிரியரை திட்டி அவருக்கு வருகை பதிவேட்டில் ஆப்சென்ட் (பாடசாலைக்கு வருகைதரவில்லை) என போட்டுள்ளார். அதனையடுத்து இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதன்போதே செருப்பால் தாக்கியுள்ளார்.

மயிலாடுதுறை

## வீட்டுக்குள் துர்நாற்றம்; அரண்டு போன கிராமம்

மயிலாடுதுறை மாவட்டம், கொள்ளிடம் அருகே புதுப்பட்டினம் கிராமத்தைச் சேர்ந்தவர் 65 வயதான பெண்ணின் கணவன், கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்னர் மரணித்துவிட்டார். அதன்பின்னர் அப்பெண், தனது மனநலம் பாதிக்கப்பட்ட மகனுடன் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த சில தினங்களாக அப்பெண் வீட்டை விட்டு வெளியே வரவில்லை. அது மட்டுமில்லாமல், அவரது வீட்டைச் சுற்றி துர்நாற்றமும் வீசி வந்ததாகவும் கூறப்படுகிறது.

சந்தேகமடைந்த அக்கம் பக்கத்தினர் அப்பெண்ணின் வீட்டிற்குச் சென்று பார்த்துள்ளனர். அங்கு அவரது மகன் மட்டும் தனியாக இருந்துள்ளான். எனினும், தரை பெயர்க்கப்பட்டு,




இருந்துள்ளது. இதனால், உடனடியாக அவர்கள் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர்.

விரைந்துவந்த பொலிஸார், தரை பெயர்க்கப்பட்டு இருந்த இடத்தை தோண்டிப் பார்த்தனர். அங்கு அப்பெண்ணின் சடலம் புகைப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனையில் உடல்நலம் பாதிக்கப்பட்டு இறந்தமை உறுதியானது. உயிரிழந்த தாயின் உடலை என்ன செய்வதென்று தெரியாமல் மனநலம் பாதிக்கப்பட்ட மகனான, வீட்டுக்குள்ளேயே குழி தோண்டி புதைத்து இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

திருவனந்தபுரம்:

## சகோதரனுக்கு கடிதம் எழுதி சகோதரி உலக சாதனை

கேரள மாநிலம் பீரு மேட்டைச் சேர்ந்தவர் கிருஷ்ணப்ரியா. பெரு வந்தானம் கிராம பஞ்சாயத்தில் பொறியியலாளராக உள்ளார். இவருக்கு கிருஷ்ணபிரசாத் என்ற சகோதருக்கும் உள்ளார்.

திருமணத்துக்குப் பின் முண்ட காயத்தில் தங்கியுள்ள கிருஷ்ணப்ரியா ஆண்டுதோறும் ஒவ்வொரு சர்வதேச சகோதரர்கள் தினத்தன்றும் (மே 24) தனது சகோதரருக்கு கடிதம் எழுதுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.

ஆனால், இந்த ஆண்டு வேலையின் காரணமாக குறிப்பிட்ட நாளில் அவரால் அண்ணனுக்கு கடிதம் எழுத முடியவில்லை. அதன்பிறகு மற்றொரு நாளில் அண்ணனுக்கு கடிதம் எழுத முடிவு செய்தார்.

தங்களது பாசம், உறவு என கிருஷ்ணப்ரியா எழுதிய கடிதம் நீளமாக சென்றது. இதற்காக அவர் காகிதக் கட்டுக்குப் பயன்படுத்தப்படும் 15 ரோல்களை வாங்கி தனது கடிதத்தை எழுதி உள்ளார்.



பின்னர் அந்த கடிதத்ததை அண்ணனுக்கு அனுப்பி வைத்தார். தங்கையிடம் இருந்து 5 கிலோ கிராம் நிறையில் வந்த பொதியை பார்த்த கிருஷ்ணபிரசாத் பரிசுப்பொருளாக இருக்கும் என நினைத்து வாங்கி பிரித்துப் பார்த்தார்.

ஆனால் அதில் கடிதம் மட்டுமே இருந்ததை பார்த்த அவர் அதிர்ச்சியடைந்தார். அந்த கடிதத்தில் அவர்களின் உறவைப் பற்றி கிருஷ்ணப்பிரியா உணர்ச்சியுடன் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தை ஆர்வத்துடன் அளந்தபோது, அது 434 மீட்டர் நீளத்தில் இருந்தது.

இதனை அவர் கொல்கத்தாவைச் சேர்ந்த யுனிவர்சல் ரெக்கார்ட் ஃபோரத்திற்கு அனுப்பினார். அவர்கள் உலக சாதனையை உறுதிப்படுத்தினர். 5 கிலோ எடையில் 434 மீட்டர் நீளத்திற்கு சகோதரனுக்கு கடிதம் எழுதிய சகோதரியின் உலக சாதனை பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.



## நியூசிலாந்துக்கெதிரான 3ஆவது டெஸ்டில்

# ஆதிக்கம் செலுத்தும் நியூசிலாந்து

இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட தொடரில், லீட்ஸில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்த மூன்றாவது டெஸ்டின் நேற்று முன்தின மூன்றாம் நாள் முடிவில் இங்கிலாந்து ஆதிக்கம் செலுத்துகிறது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, டரைல் மிற்செல்லின் 109, டொம் பிளண்டல்லின் 55, டிம் சௌதியின் 33, அணித்தலைவர் கேன் வில்லியம்ஸனின் 31, டெவோன் கொன்வேயின் 26, வில் யங்கின் 20, ஹென்றி நிக்கொல்ஸின் 19 ஓட்டங்களோடு தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 329 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஜேக் லீச் 5, ஸ்டூவர்ட் ப்ரோட் 3 மற்றும் மத்தியூ பொட்ஸ், அறிமுக வீரர் ஜேமி ஒவெர்ட்டன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, ஜொனி பெயார்ஸ்டோவின் 162, ஒவெர்ட்டனின் 97, ப்ரோட்டின் 42 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து 360 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ட்ரெண்ட் போல்ட் 4, டிம் சௌதி 3, நீல் வக்னர் 2, மிஷெல் பிறேஸ்வெல் ஒரு விக்கெட்டை வீழ்த்தியிருந்தனர்.

இந்நிலையில், தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் நியூசிலாந்து நேற்று முன்தின மூன்றாம் நாள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

தற்போது களத்தில் மிற்செல் நான்கு ஓட்டங்களுடனும், பிளண்டல் ஐந்து ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதுள்ளனர். முன்னதாக, டொம் லேதம் 76, வில்லியம்ஸன் 48 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். பந்துவீச்சில், பொட்ஸ் 2 மற்றும் லீச், ஒவெர்ட்டன், ஜோ றூட் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தியிருந்தனர்.



## றோஹித்துக்கு கொரோனா வைரஸ் தொற்று

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் றோஹித் ஷர்மாவுக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

அந்தவகையில், இங்கிலாந்துக்கெதிரான ஒற்றை டெஸ்டில் ஷர்மா விளையாடுவது சந்தேகத்துக்கிடமாகியுள்ளது.

அணி ஹொட்டலில் ஷர்மா தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவர் ஐந்து நாள்களுக்கு தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டும் என்ற நிலையில், இங்கிலாந்துக்கெதிரான இந்தியாவின் டெஸ்ட்டானது எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கிறது. நேற்று முன்தினமே ஷர்மாவுக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.



## சம்பியனான தம்பலகாமம் பிரதேச செயலகம்

ஹஸ்பர், எப். முபாரக்

திருகோணமலை மாவட்ட மட்ட எட்டுப் பிரதேச செயலகங்களைச் சேர்ந்த அணிகள் கலந்து கொண்ட கரப்பந்தாட்டத் தொடரில் தம்பலகாமம் அணி சம்பியனாகியது.

தம்பலகாமம் விளையாட்டு உத்தியோகத்தர் கே.டி. ஹாரிஸ் குறித்த அணியினருக்கு திறம்பட பயிற்சி அளித்து வந்தார். சுமார் 12 ஆண்டுகளின் பின் ஆண், பெண் அணியினர் தம்பலகாமம் பிரதேசம் சார்பாக சம்பியனாக முடிசூடியமை குறிப்பிடத்தக்கது.

## லொஸ் ஏஞ்சலஸில் இணைந்த பேல்

ஐக்கிய அமெரிக்காவின் மேஜர் லீக் சொக்கர் கழகமான லொஸ் ஏஞ்சலஸ் கால்பந்தாட்டக் கழகத்தில், ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட்டின் முன்னாள் முன்களவீரரான கரெத் பேல் இணைந்துள்ளார்.

32 வயதான பேல், றியல் மட்ரிட்டுக்காக 176 போட்டிகளில் விளையாடி 81 கோல்களைப் பெற்றிருந்தார்.



## பங்களாதேஷுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# முன்னிலையில் மேற்கிந்தியத் தீவுகள்

பங்களாதேஷுக்கெதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், சென். லூசியாவில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்த இரண்டாவது டெஸ்டின் நேற்று அதிகாலை இரண்டாம் நாள் முடிவுக்கு வருகையில் மேற்கிந்தியத் தீவுகள் முன்னிலையில் காணப்படுகிறது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மேற்கிந்தியத் தீவுகள்

பங்களாதேஷ்: 234/10 (துடுப்பாட்டம்: லிட்டன் தாஸ் 53, தமிம் இக்பால் 46, ஷொரிஃபுல் இஸ்லாம் 26, நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ 26, அனமுல் ஹக் 23, எபொடொட் ஹொஸைன் ஆ.இ 21 ஓட்டங்கள். பந்துவீச்சு: அல்ஸாரி ஜோசப் 3/50, ஜேடன் சியல்ஸ் 3/53, அன்டர்சன் பிலிப் 2/30, கைல் மேயர்ஸ் 2/35)

மேற்கிந்தியத் தீவுகள்: 340/5 (துடுப்பாட்டம்: கைல் மேயர்ஸ் ஆ.இ 126, கிறேய்க் பிறத்வெய்ட் 51, ஜோன் கம்பெல் 45, ஜெர்மைன் பிளக்வூட் 40, ஜோஷுவா டா சில்வா ஆ.இ 26, றேமன் றீஃபயர் 22 ஓட்டங்கள். பந்துவீச்சு: மெஹிடி ஹஸன் மிராஸ் 2/68, காலிட் அஹ்மட் 2/77, ஷொஃரிபுல் இஸ்லாம் 1/67)

பாகிஸ்தான்

## தேநீருக்கு பதிலாக சர்பத்தைப் பருகுங்கள் ;

# மக்களுக்கு அரசு வேண்டுகோள்

அண்மைக்காலமாகப் பாகிஸ்தான் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வருகின்றது.

இதன் காரணமாக தேயிலையின் இறக்குமதிச் செலவை கட்டுப்படுத்தும் நோக்கில், தேநீர் அருந்துவதைக் குறைத்துக் கொள்ளுமாறு மக்களிடம் அரசு



வேண்டுகோள் விடுத்து வருவதோடு தேனீருக்குப் பதிலாக லஸ்சி மற்றும் சர்பத் போன்ற பானங்களைப் பருகுமாறு அறிவுறுத்தியுள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இந்த நடவடிக்கையானது வேலைவாய்ப்பை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், பொதுமக்களுக்கு வருமானத்தையும் ஈட்டித் தரும் என்று எதிர்பார்ப்பதாகவும் பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது.

அமெரிக்கா

## இப்படியும் ஒரு போட்டியா

அமெரிக்காவில், கலிபோர்னியாவில் உலகிலேயே மிகவும் அவலட்சணமான நாய்களுக்கான போட்டியொன்று அண்மையில் நடைபெற்றுள்ளது.

இப்போட்டியில் மிஸ்டர் ஹேப்பி ஃபேஸ் என்னும் நாய் முதலிடத்தை பிடித்துள்ளதோடு, அதன் உரிமையாளருக்கு 1500 டொலர்கள் பரிசுத் தொகையும் வழங்கப்பட்டுள்ளது.

கருமை நிறம் கொண்ட குறித்த நாயானது முடி இல்லாமல், வளைந்து போன தலையுடன் உடல் முழுவது பருக்கள் கொண்டு காணப்படுவதால் நடுவர்கள் மற்றும் பார்வையாளர்களின் கவனத்தை பெற்று அதிகப்படியான ஆதரவுடன்



முதலிடம் பிடித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து அந்நாயின் உரிமையாளரான ஜெனெடா பெனாலி கருத்துத் தெரிவிக்கையில் ”தன் நாயை தான் எப்போதும்அவலட்சணமான நாயாகக் கருதவில்லை என்றும், அதனை அதிக அன்புடன் தான் வளர்த்து வந்ததாகவும் மகிழ்வுடன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் குறித்த நாயின் புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 10 செக்கன்கள் நிற்க முடியாவிடின் ஆபத்து

ஒற்றைக்காலில் 10 செக்கன்கள் கூட நிற்க முடியவில்லை என்றால் 10 வருடங்களில் உயிர் இழக்கக் கூடிய அபாயம் உள்ளது என புதிய ஆய்வொன்றில் இருந்து தெரிய வந்துள்ளது.

பிரித்தானியா, அமெரிக்கா, பிரேசில், அவுஸ்திரேலியா மற்றும் பின்லாந்து போன்ற நாடுகளை சேர்ந்த சர்வதேச மருத்துவ நிபுணர்கள் குழுவொன்று இறப்பு மற்றும் சமநிலை போன்றவற்றிற்கு இடையே தொடர்பு குறித்து ஆய்வு ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

கடந்த 2008ஆம் வருடம் தொடங்கப்பட்ட இவ் ஆய்வினை ரியோ டி ஜெனிரோ சேர்ந்த டாக்டர் கிளாடியோ கில் அராவ்ஜோ தலைமை தாங்கினார்.

இந்த ஆய்வில் 51 முதல் 75 வயது வரையிலான 1202 பேர் கலந்து கொண்டுள்ளனர் எனவும் 2020 ஆம் வருடம் வரை 12 வருடங்கள் வரை இவ் ஆய்வுகள் நடத்தப்பட்டு அதன் நடந்து அதன் முடிவுகள் பெறப்பட்டுள்ளது.

அந்த வகையில் குறித்து ஆய்வின் முடிவுகள் அண்மையில் வெளியாகியுள்ளது. அதில் ஒரு காலில் ஆதரவின்றி 10 செக்கன்கள் நிற்க முடியவில்லை என்றால் பத்து வருடங்களுக்குள் அவருக்கு மரணம் ஏற்படக் கூடிய ஆபத்து 85 சதவீதம் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ரஷ்யா

## மைக்ரோசா:.ப்ட் எடுத்த அதிரடி முடிவு

ரஷ்யாவிலிருந்து முழுமையாக வெளியேறவுள்ளதாக மைக்ரோசொஃப்ட் நிறுவனம் அறிவித்துள்ளது.

நேட்டோ அமைப்புடன் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உக்ரேன் மீது கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதியிலிருந்து ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகின்றது.

இதன் காரணமாக ரஷ்யா மீது அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் உள்ளிட்ட பல நாடுகள்




கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.

இந்நிலையில் ரஷ்யாவில் புதிய சேவைகளை வழங்குவதில்லை என அறிவித்துள்ள மைக்ரோசொஃப்ட் நிறுவனம், ரஷ்யாவை விட்டு முழுமையாக வெளியேற முடிவு செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

பிலிப்பைன்ஸ்



## திருநங்கைகளுக்கான சர்வதேச அழகிப் போட்டி;

# பிலிப்பைன்ஸ் அழகி வெற்றி

திருநங்கைகளுக்கான சர்வதேச அழகிப் போட்டியில் பிலிப்பைன்ஸைச் சேர்ந்த பிலிப்பினா ரவேனா ( Filipina Ravena)வெற்றிவாகை சூடியுள்ளார்.

கொரோனாத் தொற்றுக் காரணமாக இரண்டு ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்த குறித்த அழகிப் போட்டியானது நேற்று முன்தினம் (25) தாய்லாந்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த திருநங்கைகள் கலந்து கொண்டனர்.

இறுதிச் சுற்றில் 22 அழகிகள் கலந்து கொண்ட நிலையில் பிலிப்பைன்ஸைச் சேர்ந்த பிலிப்பினா ரவேனா, சர்வதேச அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்டு முடி சூடப்பட்டார்.

அதே சமயம் கொலம்பியா மற்றும் பிரான்ஸைச் சேர்ந்த அழகிகள் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தை தட்டிச் சென்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## அமெரிக்காவில் வலுக்கும் பெண்களின் போராட்டம்

அமெரிக்காவில் கருக்கலைப்பு உரிமைச்சட்டம் ,இரத்து செய்யப்பட்டதற்கு எதிராக லாஸ் ஏஞ்சல்ஸ், கலிஃபோர்னியா, வாஷிங்டன், நியூயோர்க் உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பெண்களால் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதே சமயம் இப் போராட்டங்களில் ஈடுபடும் பொதுமக்களைப் பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசி கலைத்து வருகின்றனர்.

இந்நிலையில் அமெரிக்காவின் அயோவா மாகாணத்தில் கருக்கலைப்பு தடைக்கு எதிராக போராடிய கூட்டத்தினர் இடையே பிக்-அப் டிரக் ஒன்று தறிக்கெட்டு ஓடியதில் பலர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற வளாக பகுதியில் போராட்டம் நடத்திய பெண்களை அச்சுறுத்தும் வகையிலேயே இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து பெண்கள் சிலர் குறித்த டிரக்கை மறித்து நிறுத்த முயன்ற நிலையில், அங்கிருந்தவர்களை தள்ளிவிட்டு டிரக் தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 27 ஜூன் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.